# உளசமூகவியல் என்றால் என்ன?

## உளசமூக பிரிவில் சொற்பதங்களை விளங்கிக்கொள்ளல்.


**உளசமூக மன்றம்**

மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளசமூகவியல் என்றால் என்ன?

## உளசமூக பிரிவில் சொற்பதங்களை விளங்கிக்கொள்ளல்.

இலங்கை, 2007

**உளசமூக மன்றம்**

**மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உளசமூகவியல் என்றால் என்ன?**
**உளசமூக பரிவில் சொற்பதங்களை விளங்கிக்கொள்ளல்**

சகல உரிமைகளும் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்புக்குரியது

முதற்பதிப்பு: *2008*

ISBN 978-955-1041-32-8

அனைத்துரிமைகளும் பெற்றது. இந்த வெளியீட்டின் எந்தவொரு பாகமும் மீள் வெளியிடவோ, திரும்பப்பெறும் முறையில் களஞ்சியப் படுத்தவோ அல்லது எந்தவொரு வடிவத்திலும் அல்லது வகையிலும் திரிவுபடுத்தவோ, இலத்திரனியல், இயந்திரவியல் அல்லது பிரதியேடுக்கவோ, பதியவோ அல்லது ஏனைய வகையில் பயன்படுத்துவதோ மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்புக்களின் அனுமதியுடனேயே ஆக வேண்டும். மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு இன் அனுமதியின்றி வர்த்தகரீதியாகவோ அல்லது விற்பனைக்கோ, இரவலாகவோ, வாடகைக்கோ அல்லது வேறு முறைகளில் விநியோகிப்பதற்கோ முடியாது.

வெளியீடு :-
மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு
86, ரொஸ்மிட் பிளேஸ் கொழும்பு-07, இலங்கை
தொலைபேசி / பக்ஸ் : (94-11) 4610943/4 :
இணையத்தளம் : www.humanitarian-srilanka.org.

முன்னட்டை வடிவமைப்பு:-
டிசைன் சிஸ்டம்ஸ்

அச்சுப்பதிப்பு:-
Design Systems (Pvt) Ltd
கொழும்பு-10
தொலைபேசி:- *011 4992300*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


நன்றி நவிலல்
முகவுரை
அறிமுகம்

## உளசமூக நன்னிலை என்றால் என்ன ? 1

**உளசமூக நன்னிலை** 2

தனியாள் உளசமூக நன்னிலை 3
கூட்டான உள சமூக நன்னிலை 5
உள சமூக தாக்கம் 6
உள சமூக தேவைகள் 7
உள சமூக பிரச்சினைகள் 7
மீட்டுப் பார்த்தலுக்கும் கலந்துலையாடலுக்குமான வினாக்கள் 8

## உள சமூக வேலைகளுக்கான மூன்று அணுகுமுறைகள் 9

**உளசமூக அணுகுமுறைகள்** 10

தலையீட்டு முக்கோண கூம்பகம் 11
உள சமூக பரப்பெல்லை அணுகுமுறை 12
ஒன்றிணைந்த அணுகுமுறை 14
கலந்துரையாடலுக்குமான வினாக்கள் 16

## உளசமூக நன்னிலையை மேம்படுத்தும் தலையீடுகள் 17

**அறிமுகம்** 18

சிநேக பூர்வமாக உதவுதல்/ஆதரித்தல் 19
உளவளத் துணை 19
விளையாட்டுச் செயற்பாடுகள் 22
விழிப்புணர்வூட்டல் 26
ஆதரவுக் குழுக்கள் 26
செயல்முறைத் தேவைகளை அடைதல் 27
செயல்முறை உதவி 27
பாதுகாப்பு 27
புனர்நிர்மானமும் மீள் ஒன்றிணைத்தலும் 28
சிறந்த தரமான சேவைகள் உறுதி செய்யப்படல் 30
வலைப்பின்னல் அமைத்தலும் இணைப்பேற்படுத்தலும்
இயலுமை வளர்த்தல/ஆளுமை வளர்த்தல் 31
மீட்டுப்பார்த்தலுக்கும் கலந்துரையாடலுக்குமான வினாக்கள் 31

## பின்னூட்டல் படிவம் 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

இக் கையேடு CHA யின் உளசமூக மன்ற (Psychosocial forum) அங்கத்தவர்களால் விருத்தி செய்யப்பட்டது. இப் புத்தகம் மல்லீகா சாலே (UNFPA) என்பரால் தொகுக்கப்பட்டடது. இணைத்து சேவையாற்றியவர்கள் ஆஷா அபயசேகர வன்டொட்(சமூக கொள்கை பகுப்பாய்வு மற்றும் ஆய்வு மையம்),கிறிஷாறா பறணவிதான(மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு), லாரா பெரேரா (யுனிசெப்) மற்றும் மல்லீகா சாலே. மேலதிகமாக கரினி அமரசூரிய (சமூக கொள்கை பகுப்பாய்வு மற்றும் ஆய்வு மையம்) லியனே கூஷாரோ (தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைப்பு) SR. பத்திமாநாயகி (செடாக்-கரிடாஸ்) தமித்தாகம (இலங்கை அல்ஸைமஸ் பவுண்டேஷன்) பிரியா யேகப் (கெயர்) மற்றும் ரூபி கரணாகரன்(ஹெல்விடாஸ்) என்பவர்களும் இணைந்து பணியாற்றினார்கள்.

சம்பவக் கற்கைகளுக்கு உதவிய கிறிஸ்டியன் சிறுவர் நிதியம் கேஷட் மற்றும் யுனிசெப் நிறுவனங்களுக்கும் மன்றம் நன்றி நவில்கின்றது. அத்துடன் மன்ற அங்கத்தவர்களுக்கும் அவர்களுடைய ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கின்றது.

அத்துடன் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு உளசமூக மன்றத்தினூடாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) இனதும் நோர்வேஜியன் சேர்ச் எயிட் (Norwegian Church Aid) இனதும் ஒத்துழைப்புக்காக விசேட நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறது.

உங்கள் கருத்துக்கள் ஆலோசனைகள் மற்றும் கேள்விகளை தெரிவிக்க உளசமூக இணைப்பாளரை 0114610943 அல்லது psfcoord@cha.lk மூலம் தொடர்புகொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பினால் உள சமூக மன்றம் (PSF) ஆண்டு 1997ல் இருந்து உள சமூகப் பிரிவில் வலைப் பின்னலை மேம்படுத்துவதையும் ஆதரவு வழங்குவதையும் அங்கத்தவர்கள் மத்தியில் இணைப்பை ஏற்படுத்துவதிலும் செயலாற்றி வருகின்றது. இலங்கையில் விரிவான உள சமூகத் தேவைகளுக்கு PSF தொடர்ந்து செவிமடுத்து வருகிறது. வெவ்வேறு நிறுவனங்களின் தகவல்களைப் பெற்று அறிவைப் பகிர்ந்து கொண்டு தனியாளினதும் சமுதாயங்களினதும் நன்நிலையை மேம்படுத்த PSF பொறிமுறைகளை அறிமுகம் செய்துள்ளது. உளசமூக மன்றம் (PSF) அரச, அரசார்பற்ற பிரிவுகளின் இடைவெளியைக் குறைப்பதற்கு பாடுபட்டுள்ளது. வேறுபட்ட ஆபத்தை நோக்குவோர் ஆலோசனையை பெற்றுக்கொள்ள பங்குகொள்வதும் ஈடுபடுவதும், திறன் சார்ந்த கூட்டங்களில் பங்குபற்றுவதும் தூண்டப்பட்டு வந்துள்ளது. வேலை செய்யும் குழுக்களில் பல்வேறு பிரிவில் உள்ளோர் பிரதிநிதிப்படுத்துவது உறுதி செய்யப்பட்டு யாவரினதும் தேவைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

CHA யின் உளசமூக மன்றத்தின் பரந்தளவிலான நோக்கில் பங்களிப்புச் செய்வதற்காக CHA யின் உளசமூக மன்றம் பணிக் குழுக்களை அமைத்தது. இலங்கையில் உளசமூக வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தரம் தகைமைகளை மேம்படுத்தவும் இக் குழுக்கள் செயற்படும் படியாக உள்ளது. இவ்வாறான குழுக்களில் ஒன்று "எண்ணக்கரு தொடர்பான தெளிவுத் தன்மை"யை ஏற்படுத்தும் செயற்பாட்டுக் குழுவாகும். இக்குழு 2003 ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உளசமூகத் துறையில் எண்ணக்கரு சார்பான தெளிவுத் தன்மையை ஏற்படுத்தும் வகையில் இக் குழு அயராது உழைத்தது. "உள சமூகவியல் என்றால் என்ன?" என்பதை வரைவிலக்கணப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்திலும் விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இச் செயற்பாட்டுக்குழு நபர்களுடனும் நிறுவனங்களுடனும் ஆலோசனை நிகழ்வுகளை நடாத்தி இலங்கை தொடர்பான உளசமூகவியல் என்ன எண்ணக்கருவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பது சார்பாக நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் உளசமூக சேவைகளை வழங்கி வருகிறது. ஒரு தனிப்பட்ட சிந்தனையை வழங்குவதை விடுத்து PSF செயற்பாட்டு எண்ணக்கருவை தெளிவுபடுத்தும், கையேடு உள சமூக பிரிவின் வேற்றுமைகளை ஒப்புக்கொள்வதோடு உள சமூகவியலில் அடங்கி இருப்பது என்ன "உள சமூக சேவைகள்" என்றால் என்ன? என்பவை பற்றிய விசேடத்துவத்தையும் முக்கியத்துவப்படுத்துகிறது. கையேடு பன்முகப்படுத்தப்பட்ட புரிந்துணர்வை ஏற்படுத்தும் அடிப்படையை வழங்குவதோடு மாறாக ஆனால் முழுமையை ஏற்படுத்தும் அணுகுமுறைகளையும் ஒப்புக்கொள்கிறது. இவ்வாறான பரந்த அடிப்படையிலான அணுகுமுறையை மேம்படுத்தும் அதேவேளையில் கையேடு எந்தவொரு சட்ட வரைபுக்கோ அல்லது முகவர்களுக்கோ பக்கச் சார்பற்றது. பதிலாக இலங்கையில் சகல பாதிக்கப்பட்டோரையும் உளசமூக பிரிவில் நாட்டம் உள்ள சகலரையும் பிரதிபலிக்கின்றது. குழு பன்முகப்படுத்தப்பட்ட அணுகுமுறையை வழங்கி எண்ணக்கரு சார்பான தெளிவுத் தன்மையை மேம்படுத்தி வருகிறது அதனூடாக பல்வேறுபட்ட வகையில் பாதிக்கப்பட்டு அவதியுறுவோரின் வெளிப்பாடுகளும் முறைப்பாடுகளும் இனம் காணப்பட்டன. அத்தோடு பாதிப்புற்றோர் சார்பாக காட்டப்படும் பல்வேறு தலையீடுகளினதும் பெறுமதி ஒப்புக்கொள்ளப்பட்டது. இருந்தபோதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உளசமூகவியல்' என்பதை தெளிவாக வரைவிலக்கணப்படுத்தி ஒரு பரந்த சட்ட வரைபை விருத்தி செய்து அதனூடாக பொதுவானதொரு புரிந்துணர்வை நிறுவுவதின் தேவையுண்டு. "உளசமூகவியல் என்றால் என்ன" எனும் கலந்துரையாடலின் மத்தியில் உளசமூகவியல் வேலை ஒரு தலையீடா அல்லது அணுகுமுறையா என்ற விவாதம் உண்டு. தலையீடு (intervention) எனும் பொழுது ஒரு குறித்த நிகழ்ச்சித்திட்டம் அல்லது ஒரு தொகுதி சேவைகள் என்றோ அணுகுமுறை (approach) எனும்போது மனிதாபிமான அபிவிருத்தி வேலை ஒன்று விசேட கொள்கைகளுடன் உள சமூக நன்நிலையை மேம்படுத்தப்படுகிறது என்றோ விவாதிக்கப்படுகிறது. இலங்கையில் 'உளசமூக சேவைகள்' என்பது பரந்த அளவிலான சேவைகளையும் உளச் சிகிச்சை தலையீடுகள் செயல்முறை உதவிகள் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

CHA யின் உளசமூக மன்றம் (PSF) 1997ல் நிறுவப்பட்டது. இதன் குறிக்கோள்கள் இலங்கையில் தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் என்பவற்றால் மேற்கொள்ளப்படும் உளசமூக வேலைகளின் தரம், தகவுத்தன்மை, கணக்குக்காட்டல் என்பவற்றை மேம்படுத்துவதாகும். PSF முரண்பாடுசார் பிரச்சினைகளுக்கு அழுத்தம் கொடுக்கிறது. PSF வின் நோக்கம் தனியாள்கள் மத்தியிலும் சமுதாயங்கள் மத்தியிலும் உளசமூக நன்நிலை மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்வதாகும்.

2002 ஒக்டோபர் மாதம் நிகழ்த்தப்பட்ட உளசமூக பொது மன்ற திட்டமிடல் கூட்டத்தில் 'உளசமூகவியல்' 'மனவடு' 'உளவளத்துணை' போன்ற உளசமூக பிரிவில் உள்ள பதங்கள் பற்றிய ஒரு பொதுவான சொற்பத விளக்கம் இல்லாமைப் பற்றிய விடயம் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. உளசமூகப் பிரிவில் எவ்வித முன்னேற்றத்தையும் மேற்கொள்ளமுன் உளசமூக சொற்பதங்கள் பற்றிய பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு விளக்கம் முகவர்கள் மத்தியில் இருக்க வேண்டும் என சந்தேகம் எதுவும் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதை அடைவதற்கு PSF ஒரு செயற் குழுவை நியமித்தது. செயற் குழு உளசமூக சொற்பதங்கள் பற்றிய ஒரு தெளிவுத் தன்மையை துறையின் வேற்றுமை மத்தியிலும் ஏற்படுத்த எதிர்பார்க்கப்பட்டார்கள். குழுவின் பிரதான குறிக்கோள்களாவன:

- இலங்கையில் உளசமூகப் பிரிவு எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றி அச்சுறுத்தல் அற்ற வழியில் ஆராய்தலை இலகுபடுத்தல்
- ஸ்ரீலங்காவில் முன்னெடுக்கப்படும் உளசமூக செயற்பாடுகளின் வேறுபாடுகளை ஆழமாகவும் விரிவாகவும் புரிந்துகொள்ளல்.
- மனிதாபிமான நிறுவனங்களின் தனிப்பட்ட உளசமூக தலையீடுகள் இலங்கையில் உளசமூக பிரிவின் ஏனையோருடன் எண்ணக்கரு ரீதியாக எவ்வாறு தொடர்புபடுகிறது என இனம் கண்டுகொள்ள உதவுதல்.

இக் குறிக்கோளை அடையும் வண்ணம் செயற்பாட்டுக் குழு பல பயிற்சிப்பட்டறைகளை முகவர்களுக்கும், தனிநபர்களுக்கும் நடத்தியது. அப் பயிற்சிப்பட்டறைகளில் பிள்ளைகளுக்கான விளையாட்டுச் செயற்பாடுகள் பராமரிப்போருக்கான பயிற்சிகள் வருமானம் ஈட்டக் கூடிய செயற்பாடுகள் போன்றன இடம்பெற்றன. பங்குபற்றியோர் தேசிய மாவட்ட மட்ட வலைப் பின்னல் இணைப்புக்களுக்கூடாக அழைக்கப்பட்டார்கள். இதன் மூலம் அனைத்து மாவட்ட மட்ட பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டது. முதலாவது பட்டறை 2003 செப்டெம்பர் மாதம் நடாத்தப்பட்டது. இதில் பல்வேறு உளசமூக செயற்பாடுகள், பிரச்சினைகள் பற்றி பேசப்பட்து. பங்குபற்றியோர் விளையாட்டுச் செயற்பாடுகள் ஆதரவுக் குழுக்களுக்கு உளவளத் துணை வழங்கல் போன்ற 20 செயற்பாடுகள் 'உளசமூக' எனக் கூறும் வகையில் இனம் கண்டனர். இச் செயற்பாடுகள் துஷ்பிரயோகம், வன்முறை, போதைவஸ்து துஷ்பிரயோகம், வேறுபடுத்திப்பார்த்தல், ஏழ்மை, மனவடுவுக்குள்ளான அனுபவங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை குறிக்கும் படியாக இருந்தன. பட்டறையின் விளைவுகள் சட்டவரைபாக குறிக்கப்பட்டு வரைப்படத்தில் விசேட பிரச்சினைகளுக்கான உள சமூக செயற்பாடுகள் காட்டப்பட்டது. 2004 மார்ச் மாதம் நடாத்தப்பட்ட 2வது பயிற்சிப் பட்டறை பரஸ்பரமான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டது. முதலாவது பட்டறையில் சேகரித்த செயற்பாடுகளையும் பிரச்சினைகளையும் கலந்து கொள்வதோடு ஒத்த வேறு செயற்பாடுகளையும் பிரச்சினைகளையும் சேகரித்தல். பெறப்பட்ட முடிவுகளில் உதாரணமாக உளவளத்துணை வழங்கல், சிநேகம் ஏற்படுத்தல், விளையாட்டுச் செயற்பாடுகள் போன்றவை சேகரிக்கப்பட்டன. இவை 'சமூக சிகிச்சை ஆதரவு' எனும் பிரிவில் சேர்க்கப்பட்டது. மன அழுத்தம், வடுவுக்குள்ளான அனுபவங்கள், போதைவஸ்து துஷ்பிரயோகம், தனிமை போன்றவற்றுடன் தொடர்பான பிரச்சினைகளை 'நன்னிலை இன்மை' என்ற பிரிவில் வகைப்படுத்தப்பட்டது.

முன்னைய பயற்சிப்பட்டறைகளின் அடிப்படையில் ஒரு அஸ்திவாரம் கட்டியெழுப்புவதற்காக 2004 மே மாதத்தில் செயற்பாடுகளையும் பிரச்சினைகளையும் பங்குபற்றியோர் மத்தியில் பகிர்ந்துகொண்டு செயற்பாடுகளையும் பிரச்சினைகளையும் உளசமூக தன்மை உடையதாக்க ஒரு பயிற்சிப்பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 'பிரச்சினை ஒன்றை உளசமூகத் தன்மையுடையதாக்குவது என்ன?' இவ்வாறான பிரச்சினையை ஆராய்ந்து அணுகுவது 'உள சமூக நன்னிலைக்கு உதவுவது எப்படி?' இச் செயற்பாடு எவ்வாறு உளசமூக நன்னிலைக்கு பங்களிப்புச் செய்கிறது. போன்ற கேள்விகள் கலந்துரையாடப்பட்டன.

இக் கையேட்டை விருத்தி செய்வதற்கு பயிற்சிப் பட்டறைகளின் விளைவுகள் உதவியது. எண்ணக்கரு தெளிவு சார்பான கையேடு அபிப்பிராயங்களின் வேற்றுமைத் தன்மையையும் கலந்துரையாடல்களின் செழிப்பையும் எடுத்தியங்குவதோடு சில எண்ணக்கருக்கள் தொடர்பாக ஒரு பகிர்ந்துகொள்ளக்கூடிய புரிந்துணர்வையும் ஏற்படுத்துகிறது. இக் கையேடு தனியாள்களுக்கும் முகவர்களுக்கும் உளவியல் ரீதியாகவும் சமூக நன்னிலை ரீதியாகவும் மேம்பாட்டை ஏற்படுத்த உதவுவதோடு இலங்கையில் தனியாள்கள் சமுதாயங்கள் மத்தியில் 'உளசமூகவியல்' என்றால் என்ன? உளசமூக தலையீடுகள் எனக் கொள்ளப்படுபவை என்ன என்பதை விளக்க முயல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளசமூக நன்னிலை என்றால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளசமூக நன்னிலை

நன்னிலை என்பது பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு ஆற்றல் வாய்ந்த எண்ணக்கரு. பரந்தளவில் சொல்லப்போனால் பொதுவான ஒரு திருப்தியான ஆறுதலான ஒரு நிலையைக் குறிக்கிறது. நன்னிலை பற்றிய மிக விரிவான விளக்கம் தருவதாகில் திருப்தி ஆறுதல் என்பன பற்றி சிறந்த புரிந்துணர்வு தேவை. அதாவது எவற்றுடன் ஒருவர் திருப்தியும் ஆறுதலும் அடைகிறார் அல்லது திருப்தி ஆறுதல் எவற்றால் அடையவில்லை என்பதாகும்.

ஒரு எண்ணக்கரு என்ற நிலையில் 'நன்னிலை' எனும் பதம் தனியாளுக்கும் பொருந்தும் கூட்டாகவும் பொருந்தும். அதாவது ஒரு தனியாளின் நன்னிலை பற்றியும் பேசப்படலாம். அல்லது கூட்டாக குடும்பம், சமுதாயம் அல்லது நாடு என்பவற்றின் நன்னிலை பற்றியும் பேசலாம்.

உளசமூக நன்னிலை என்பது நன்னிலையின் குறித்த பரிமாணங்கள் பற்றி விளக்குகிறது. அதாவது நன்னிலையுடன் இருப்பது நன்னிலையை அடைவது அல்லது ஒரு நன்னிலைக்கு சொந்தமாக இருப்பதை சார்ந்ததே உளசமூக நன்னிலை காணப்படுகின்றது.

மறுவார்த்தைகளில் சொல்லப்போனால் உள சமூக நன்னிலை என்பது ஒரு தனியாளுக்கு வாழ்வு எவ்வாறு உள்ளது (being). செழிப்புற வாழ்வதற்கான ஆற்றல், வளம், (becoming) தனியாளுக்கும் குழுக்களுக்குமிடையில் எவ்வகையான உறவுகள் காணப்படுகின்றன (belonging) என்பவற்றைக் குறித்து நிற்கின்றது.

உளசமூக நன்னிலையில் பல்வேறு நிகழ்வுகள், தனிப்பட்ட கூட்டான அனுபவங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும், இவற்றுடன் தற்போதுள்ள சமூக, கலாச்சார, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளும் சேர்ந்து தொழிற்படும். எவ்வகையில் அல்லது எந்த அளவுக்கு உளசமூக நன்னிலை திருத்தியமைக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது என்பதையே 'உளசமூக தாக்கம்' எனக் கூறப்படும்.

உளசமூக நன்னிலையைப் பாதிக்கும் காரணிகளை மேம்படுத்தும் அல்லது மட்டுப்படுத்தும் தலையீடுகள் உள சமூக தலையீடுகள் எனப்படும். எவ்வாறாயினும் மக்களுடன் தொர்புடைய எவ்வகையான தலையீடுகளும் உளசமூக தாக்கத்தை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது. உளசமூக தாக்கத்தின் அளவு தலையீட்டுக்குத் தலையீடு நடைமுறைப்படுத்தலைப் பொறுத்து வேறுபடும்.

தனியாட்களுக்கும், கூட்டாக குழுக்களுக்குமான உளசமூக நன்னிலைப் பற்றி வேறாகக் கீழே கலந்துரையாடப்படுகிறது. நன்னிலை அனுபவம் தனியாள்களைப் பொறுத்தளவில் கூட்டான மட்டத்தில் உள்ளதைவிட வேறுபடும். அதேபோன்று தனியாள் நன்னிலையைப் பாதிக்கும் காரணிகளும் வேறுபடும்.

சில நிபந்தனைகள் முழுமையாக இருக்கும். ஆனால் வேறு சில முரண்பட்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். சில சம்பவங்களில் தனியாள் நன்னிலையைப் பாதுகாக்கும் காரணிகளுடன் முரண்படும். விளைவாக தனியாள் நன்னிலைக்கும் கூட்டான நன்னிலைக்கும் இடையில் கணிக்கக்கூடிய சமநிலைப் பேணப்பட வேண்டுமாயில் மிகக் கவனமான அக்கறையும் இணக்கப்பாடும் தேவைப்படுகிறது. காரணம் பிரச்சினை கடுமையான ஒழுக்கம் சார்ந்ததும் நீதிக்குரியமானதுமாகும்.

## தனியாள் உளசமூக நன்னிலை

தனியாள் உள சமூக நன்னிலை என்பது தனியாள் ஒருவரின் உடற்தொழிற்பாட்டியல், உடலியல், சமூக, உள, உணர்வு, கலாச்சார உலகியல் பரிமாணங்களின் விளைவாக ஏற்படும் உணர்வு ரீதியானதும் உறவு ரீதியானதுமான ஒரு நிலையைக் குறிக்கின்றது. இப் பரிமாணங்கள் ஒருவரின் தனிப்பட்ட சூழ்நிலைகள், தமக்கு உரித்து உண்டு என்ற எண்ணமும் பாதுகாப்பும், தற்சமயம் காணப்படும் நிலமை, திட்டவட்டமான சந்தர்ப்பம் என்பவற்றினால் செல்வாக்கிற்குட்படுத்தப்படும்.

உணர்வு ரீதியான மனோபாவங்களும் வேறுபாடுகளும் மனித வாழ்வில் சமமாக இருக்கும் அதேவேளையில் தனியாள் உள சமூக நன்னிலைக்கு உணர்வு ரீதியான மீள் திறனும் (resilience) திருப்தி, பாதுகாப்புணர்வு, நம்பிக்கை என்பன உள்ளமையும் அவசியமாகிறது. அன்பு காட்டலும் அன்பு காட்டப்படுகிறோம் என்ற உணர்வும் முக்கியம்.

உலகம் பற்றிய அர்த்தம் காணலும் தனிப்பட்ட ஒரு தொகுதி நம்பிக்கை கொண்டிருத்தலும் ஆன்மீகத்தில் பரிமாணங்களாகும். இவை உளசமூக நன்னிலையின் பிரதான அம்சங்களாகும். உள்ளார்ந்தமாக வாழ்வை மதிப்பிடுதலும் வாழ்வில் நம்பிக்கை கொள்ளலும் தன்னிலும் உடன் வாழும் மனிதரிலும் மற்றும் பிராணிகளிலும் பிடிப்பும் அன்பும் கொண்டிருத்தலும் முக்கியம். இதனால் கருதப்படுவது யாதெனில் ஒருவர் தன்னுடைய நன்னிலையை மதித்தல் வேண்டும்.

அதே நேரத்தில் இன்னொருவருடைய நன்னிலை வீழ்ச்சியில் தான் நன்னிலையை பெறுவது இருத்தல் ஆகாது. இதற்கு தனியாள் மட்டத்திலும் பொது ஜன மட்டத்திலும் அதிகாரம் உபயோகிப்பதில் பொறுப்பு அவசியம். மனசாட்சியை முறையாக பயன்படுத்துவது உள சமூக நன்னிலைக்கு பங்களிப்புச் செய்கிறது.

தனியாள் உள சமூக நன்னிலை பின்வருவனவற்றினூடாக முன்னேற்றப்படுகிறது.

- உணர்வு ரீதியாக மீளும் தன்மை
  - திருப்தி
  - பாதுகாப்புணர்வு
  - எதிர்ப்பார்ப்பு
  - நெகிழ்ச்சித் தன்மை
- ஆன்மீகம்
  - உலகம் பற்றிய அர்த்தம்
  - தனிப்பட்ட நம்பிக்கைகள்
  - வாழ்விற்கு பெறுமதி கொடுத்தல்
  - மனச்சாட்சி
- அர்த்தமுள்ள உறவுகள்
  - சமூக ரீதியாக பெறுமதியுள்ள அடையாளம்
  - உரித்துடையோம் எனும் உணர்வு
  - தனியாள் அபிப்பிராயங்கள்
  - நடத்தை வேறுபாடுகளை சமாளிக்கும் ஆற்றல்
  - பாதுகாப்பு
- சுதந்திரம்
  - தெரிவு
  - முகவர்
  - கட்டுப்படுத்தும் அளவு
  - யுத்திகளைக் கையாளும் திறனும் எதிர்ப்புக்காட்டும் ஆற்றலும்
- வளங்கள் மீது கட்டுப்பாடு
  - கிடைக்கக்கூடிய வளங்களை உபயோகிக்கும் ஆற்றல்
  - புதிய வளங்களை பெறும் ஆற்றல்
- உள அற்றல் (Mental Ability)
  - தகவலும் கல்வியும் உளதொழிற்பாடு

உள சமூக நன்னிலை சமூகம்சார், உறவுகள் சார் அம்சங்களைக் கொண்டிருப்பதால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாளினதும் உள சமூக நன்னிலை அவர்களைச் சுற்றியிருக்கும் மனிதர்களுடன் தொடர்புடையது என்பதை இனம் கண்டு கொள்வது மிகவும் முக்கியம். தனியாள் மட்டத்திலும் பொது ஜன மட்டத்திலும் அர்த்தமுள்ள உறவுகள் பேணல், வேற்றுமையுள் ஒற்றுமைக் காணல், பல்வகைத்தன்மையை புரிந்துகொள்ளல் போன்றவை மிக முக்கியம். இதே நேரத்தில் உரித்துடைமையுள்ள உணர்வும் அத்துடன் மதிப்புள்ள ஒரு சமூக அடையாளத்தைக் கொண்டிருத்தலும் நன்னிலையின் ஒரு பகுதியாகும்.

மேலும் மனிதர் தமது சொந்த தீர்மானங்களை எடுப்பதற்கும் தனியாள் உளசமூக நன்னிலையை அனுபவிக்கவும் முகவர் கூறு தேவைப்படுகிறது. சிலருக்கு இது சமூக எதிர்ப்பார்ப்புக்களுக்கு இணங்குவதாக இருக்கும். சிலருக்கு சமூக எதிர்ப்பார்ப்புக்களில் இருந்து விலகுவதாக அமையும்.

மக்கள் விசுவாசமான சுதந்திரமான தெரிவை மேற்கொள்வதற்கு சமூக, சட்ட அல்லது கட்டமைப்பு ரீதியான கட்டாயப்படுத்தல் இல்லாதிருத்தல் வேண்டும். பெற்றோர் அல்லது பாதுகாவலர் மீது வழிக்காட்டலுக்கும் பாதுகாப்புக்கும் தங்கியிருக்கப் பார்க்கும் ஒரு பரிமாணம் இனம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான நிலமைகளில் எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் பிள்ளையின் நன்மைக் கருதி எடுக்கப்படுவது உறுதி செய்யப்படுதல் வேண்டும். இதற்கு மாறாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பிள்ளையின் உடல்மேல் விசுவாசத்தைப் பாதிப்பது மட்டுமல்லாது, தற்கால எதிர்கால நன்னிலையையும் பாதிக்கும். உதாரணம் பெண்களுக்கு சுன்னத்து செய்தல். அந்நிலையில் சுய தீர்மானம் தனியாள் உளசமூக நன்னிலை பாதிக்கும் ஒரு பகுதியாக முக்கியம் பெறுகிறது.

உள ஆற்றலும் தனியாள் நன்னிலையில் கணிசமான அளவு பங்களிப்புச் செய்கிறது. கற்றல் நடவடிக்கைகள் ஞாபகசக்தி புலக்காட்சி பெறுதல் போன்றவை பாதிக்கப்படாதிருத்தல் மக்களுக்கு உலகைப் புரிந்துகொள்ளவும் அனுபவங்களை மீட்டுப்பார்க்கவும் தகவல்களைப் பெறவும் உதவுகிறது.

தனியாள் ஒருவருக்கு நிலமைகளுக்கும் மாற்றமடையும் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் ஆற்றலும் நன்னிலைக்கு அவசியம். சமனாக விமர்சனத்துடன் கூடிய மீட்டுப் பார்க்கும் ஆற்றலும் மாற்றங்களை மதிப்பீடு செய்தலும் தனியாள் அல்லது கூட்டு நன்னிலைக்கு எதிரான சக்திகளை எதிர்க்கும் ஆற்றலும் தேவை.

எனவே, பொருத்தி வாழ்தலும் எதிர்த்து நிற்றலும் இரண்டுமே முக்கிய திறன்களாகும். தனியாள் மட்டத்தில் இத் திறன்கள் முக்கியம். ஏனெனில் ஒருவரது வாழ்வில் அவரது குடும்ப அங்கத்தவர்கள், சிநேகிதர்கள், ஏனையோர் ஆகியவர்களின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களையும் அவர் சமாளிக்கும் ஆற்றல் அவருக்கு அவசியம்.

இறுதியாக கிடைக்கப் பெறும் வளங்களை உபயோகிக்கவும் தெரிந்திருத்தல் அவசியம். காரணம் வாழ்வு சிறப்புறும். அத்தோடு தேவை ஏற்படும்போது புதிய வளங்களையும் வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவுகளும் சக்திகளும் தேவை.

பிறப்பியல் குணாதிசயங்கள் தனியாளினது உள சமூக நன்னிலையை பாதிக்கும் அதே வேளையில் நன்னிலையைப் பெருமளவு தீர்மானிப்பது குடும்பங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயங்களுக்குமிடையிலான சமூகமயமாக்கல் நடைமுறையாகும். அதே நேரத்தில் சமுதாய நிறுவனங்கள், நடைமுறைகள், கட்டமைப்புகள் உண்மையான தனியாளின் உள சமூக நன்னிலை மேம்பாட்டை மத்தியஸ்தம் செய்யும்.

சமுதாயம் ஒன்றில் பங்கீடு செய்யப்பட்டிருக்கும் வளங்கள் அதிகாரத்ததை தீர்மானிப்பதாகவும், இது தனியாள்கள், குழுக்கள் என்பவற்றிற்கிடையிலான உறவுகளின் தரத்தையும் தன்மையையும் தீர்மானிக்கும் எனவும் இனம் கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலை குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை நன்னிலையில் ஏற்படுத்தும்.

## கூட்டான உள சமூக நன்னிலை

குடும்பம், குழு அல்லது சமுதாயம் போன்றதொரு முழுமையின் உள சமூக நன்னிலையை கூட்டான நன்னிலை எனும் பதம் குறிக்கின்றது. முழுமையினதும் அம் முழுமைக்குள்ளும் உள்ள Sense of being and belongingஐயும்குறிக்கின்றது.

சமூக, சட்ட, கலாச்சார, அரசியல், பொருள் பரிமாணங்களின் விளைவாக கிடைக்கக்கூடிய ஒருஅதிகாரம் உள்ள சூழழிலினாலேயே முதன்மையான கூட்டான நன்னிலை கைகூட்ட வாய்ப்பேற்படும். எனவே ஒரு அதிகாரம் உள்ள சூழலை உறுதி செய்வதே கூட்டான குழுவின் முதன்மையான வேலையும் பங்களிப்புமாகும்.

கூட்டு முழுமைக்குள் தனிப்பட்ட தமது இயலுமைக்கேற்ப தத்தமது ஆற்றல் வளத்தை அடைவதற்கு வாய்ப்புக்கள் இருத்தல் அவசியம். இது சூழலினுள் அங்கத்தவர்கள் பேணி வளர்த்தெடுக்கப்பட்டுள்ள தரத்தில் பிரதிபலிக்கப்படும். பேணி வளர்த்தல் என்பது கூட்டுக் குழு ஆபத்தை எதிர்கொள்ளும் அல்லது பாதிக்கப்பட்ட அங்கத்தவர்கள் மீது காட்டப்படும் கவனமான ஈடுபாடு. இதனூடாக அவர்களை தமது ஆற்றல் வளத்தை அடையச் செய்தல் இதேவேளை குழுக்களஇ வேறுபாடுகள், பலவகைத் தன்மை வித்தியாசங்கள் போன்றவை சூழலினுள்ளே தனியாள்கள் உப குழுக்கள் மத்தியில் காணப்படுமிடத்து அவற்றைக் கையாளத் தெரிதல் வேண்டும். அவரது அதிகாரமுள்ள சூழல் வேற்றுமைக்கு ஆதரவளித்து அங்கத்தவர்கள் தமது அடையாளத்தை உறுதி செய்து கருத்துக்களை வெளியிட வாய்ப்பளிக்க வேண்டும்.

**கூட்டான உள சமூக நன்னிலை பின்வருவனவற்றிற்கூடாக வளப்படுத்தப்படுகிறது.**

- பேணி வளர்த்தல்
  - ஆபத்துக்குள்ளாகக் கூடியவர்களில் கவனம் செலுத்துதல்
  - மக்கள் தமது ஆற்றல் வளத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள்.
  - வேற்றுமைகளுக்கு சகிப்புத் தன்மை.
- பாதுகாப்பு
  - பொறுப்புள்ள அதிகாரப் பாவனை.
  - வாழ்வுக்கு மதிப்பளித்தல்.
  - மக்களின் விசுவாசத்தைப் பாதுகாத்தல்.
  - சட்ட விதி.
- பங்கேடுத்தல்
  - ஆலோசனையுடன் கூடிய தீர்மானம் எடுத்தல்.
  - நேர்மை.
  - தகவல்களும் கல்வியும்.
- நிலைபேறு /நிலை நாட்டுதல்
  - வளங்களைப் பெறுதல்.
  - பாவித்தலுக்குமான ஆற்றல்.
  - பொருத்தி வாழ்தலும் எதிர்த்தலும்.
  - நிகழ்கால எதிர்கால நிலமைகளை பகிர்ந்து கொள்ளும் உணர்வு.
- இணைந்த செயற்பாடுகளும் நிகழ்வுகளும்
  - விசேட விழாக்கள்
  - கிரியைகள்
  - இணைந்த செயற்பாடுகள்
  - இணைந்து செயலாற்றல்

பாதுகாப்பு கூட்டான உள சமூக நன்னிலையின் ஒரு முக்கிய கூறாகும். இது மனிதர் அடுத்தவர்களை துன்புறுத்தும் ஆற்றல் இனம் காண்பதோடு அப்படியான நிகழ்வுகளை தடுக்கவோ மத்தியஸ்தம் செய்யவோ முயற்சிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பின் தொழில்களாக தனியாள் அங்கத்தவர்களை பாதுகாத்தல், சட்ட விதியை நிறுவுதல் இவற்றினூடாக ஒரு ஒட்டு மொத்த பாதுகாப்புணர்வை குழுவுக்கு வழங்கல், கூட்டான உள சமூக நன்னிலையின் இன்னொரு முக்கிய கவனம் பொறுப்புள்ள வகையில் அதிகாரத்தை உபயோகித்தலாகும். விசேடமாக நியாயம் உள் வாங்கிக்கொள்ளல் போன்றவை ரீதியாக இந்த வகையில் கூட்டுக் குழுக்குள்ள பொறுப்பு ஒவ்வொரு வளத்தையும் பாதுகாத்து மேம்படுத்தலாகும்.

கூட்டு நன்னிலையைப் பேணுவதில் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் சமூக நீதி சரியாக வழங்கப்பட்டு அவர்களின் சமத்துவம் உறுதி செய்யப்படல் வேண்டும். இது விடயத்தில் கூட்டு நன்னிலையைப் பேணலில் தீர்மானங்கள் எடுக்கும் நடவடிக்கைகள், வளப் பகிர்வு, வேறும் கட்டமைப்புத் தொழிற்பாடுகள் சூழலில் ஒரு சிலரது நன்மையைக் கருதி மட்டுமல்லாமல் யாவர்க்கும் நன்மை பயக்கும் வகையில் இடம் பெறுவது உறுதி செய்யப்படல் வேண்டும். எனவே கூட்டு நன்னிலை எந்தவொரு தனி அங்கத்தவரது முன்மாதிரியையும் கொண்டிருத்தல் ஆகாது.

தனியாள்களைப் போன்று கூட்டாகவும் புதிய சூழ்நிலைகளுக்கேற்ப கற்க, பொருத்தி வாழ, மாற்றங்களுக்கு முகங்கொடுக்க இயலுமாய் இருத்தல் வேண்டும். கால மாற்றத்தோடு குடும்பங்களின் கலாச்சாரங்களின், சமுதாயங்களின் சமூகங்களின் நடைமுறைகளும் தேவைகளும் விரிவாக்கப்படும். புதிய யதார்த்தங்களுக்கேற்ப பொருத்தி வாழவும் முகம் கொடுக்கவும் நெகிழ்ச்சித்தன்மைத் தேவை. அதே நேரத்தில் தனியாள் அல்லது கூட்டு நன்னிலையைப் பாதிக்கும் எந்தவொரு மாற்றத்தையும் எதிர்க்கவும் தெரிந்திருத்தல் வேண்டும். சூழலில் உள்ள அங்கத்தவர்கள் யாவரினதும் நன்மைக் கருதி வளங்களை உபயோகித்தல் அவசியம். அதன்போது ஆபத்தை எதிர் நோக்குபவர்களின் தேவைகள் விசேட கவனத்திற்குட்படுத்தப்படல் வேண்டும்.

தற்கால எதிர்கால நிலமைகள் பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும். கிடைக்கப் பெறும் வளங்கள் எதிர்காலத்திற்கு விசேடமாக எதிர்கால சந்ததியினருக்காக தக்க வைக்கப்படல் வேண்டும்.

கூட்டாக இருத்தல், கூடி வேலை செய்தல் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ்வாறான நிகழ்வுகள், செயற்பாடுகள், குடும்பங்கள், குழுக்கள், சமுதாயங்களுக்கு ஒரு பொதுவான முதலிடத்தைக் கொடுத்து ஒரு உரித்துடமை உணர்வை ஏற்படுத்தும். அவை பொதுவான விழா நிகழ்வுகள் கிரியைகள் ஒன்று சேர்ந்து செய்யவும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கும்.

முடிவாக கூட்டான நீதி பற்றிய விழுமியங்கள், இணைப்பு மாற்றம் உரிமைகள் யாவும் பல்வேறு பரிமாணங்களில் தனியாள் உள சமூக நன்னிலைக்கு பங்களிப்புச் செய்கின்றது. (உதாரணம் : உடல், உள, ஆன்மீக ரீதி, உணர்வு ரீதி) கலாச்சாரம், அரசியல், சமூக, பொருள் ரீதியான உறவுகளும் நன்னிலையை மத்தியஸ்தம் செய்கின்றன.

### உள சமூக தாக்கம்

உள சமூக தாக்கம் என்பது உள சமூக நன்னிலையை என்ன வகையில் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என்பதை குறிக்கின்றது. அதாவது மாற்றத்தின் தன்மையும் அளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தின் அளவு, கடுமை என்பது தனியாளினதும் கூட்டினதும் மீள் தன்மை, சூழ்நிலை, சந்தர்ப்பம் உள் அடங்கலாக பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. உள சமூக நன்னிலை மேம்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டால் அல்லது தடை செய்யப்பட்டு குறைக்கப்பட்டதன் விளைவாக ஏற்படுவதே உள சமூக தாக்கம் எனப்படும்.

பெரும் நிகழ்வுகள் அனுபவங்கள் உள சமூக நன்னிலையைப் பாதிப்பது போன்று நாளாந்த அனுபவங்களும் வாழ்க்கை நிலமைகளும் உள சமூக நன்னிலையை பாதிக்கும். தலையீடுகளும் சேவைகளும் உள சமூக நன்னிலையில் விளைவவை ஏற்படுத்தும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் உள சமூக நன்னிலையை நோக்கிய தலையீடுகளும் வேறு வெளிப்படையான குறிக்கோள்களைக் கொண்ட தலையீடுகளும் உள்ளடங்கும். இந்தவகையில் சகல அபிவிருத்தி வேலைகளும் மனிதாபிமான தலையீடுகளும் உள சமூக நன்னிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## உள சமூக தேவைகள்

ஒருவகையில் சகல மனித தேவைகளும் தேவைகள் மாற்றிச் செய்யப்பட்டாலும், உள சமூக நன்னிலையை பாதித்து தாக்கத்தை ஏற்படுத்தும். நன்னிலைக்கான தேவைகள் இருக்கும் என்பதை பொதுவாக இனங்காண்பதோடு சில திட்டவட்டமான தேவைகள் உள சமூக நன்னிலைக்கு தேவை என்பதை இனம் காண வேண்டும். அத்தோடு உள சமூக நன்னிலையை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான கூறுகளை பழைய நிலைக்கு கொண்டுவரவோ பாதுகாக்கவோ தேவை என்பதும் உணரப்படல் வேண்டும். இவை யாவும் கூட்டாக உள சமூக தேவைகள் எனப்படும். எப்படியாயினும் மக்கள் தத்தமக்கேற்றவாறு தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவர்கள். எனவே இரண்டு அல்லது மேற்பட்ட தேவைகள் ஒரே நேரத்தில் கவனிக்கப்பட வேண்டியிருந்தால் தனியாளோ குழுவோ எதற்கு முன்னுரிமை வழங்குகிறார்கள் என்பதை புரிந்து கொள்வது முக்கியம்.

மேலும் சகல உள சமூக தேவைகளையும் பட்டியல்படுத்துவது கடினம். காரணம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தேவைகள் மாறுகின்றன. உதாரணமாக, அழிவு மற்றும் முரண்பாட்டு நிலமைகளில் தனியாளில் அல்லது சமூக அமைப்பில் ஏற்படும் அழிவு என்பது புதிய தேவைகள் உருவாக்க வழிவகுக்கலாம்.

## உள சமூக பிரச்சினைகள்

உள சமூக பிரிவில் 'உள சமூகப் பிரச்சினைகள்' எனும் பதம் பரவலாக உபயோகிக்கப்படுவது உள சமூக நன்னிலையில் எதிரான தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை குறிப்பதற்கேயாகும்.

எப்படியாயினும் அநேகமானோர் இவ்விரண்டு பதங்களையும் மிக குறைவான தெளிவுடனேயே பொதுவாக உபயோகிக்கிறார்கள். எந்த உள சமூகப் பிரச்சினை அல்லது இடர்பாடு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என முயற்சிப்பதில்லை. பதிலாக சரியான உள சமூகப் பிரச்சினை கலந்துரையாடப்படல் வேண்டும் என விபரிக்கப்படுவது தெளிவாக இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்டுப் பார்த்தலுக்கும் கலந்துரையாடலுக்குமான வினாக்கள்

1. உமது வேலையில் நீர் எவ்வகையான உள சமூக நன்னிலைக் கூறுகளை இனம் காண்கிறீர்?
2. எவ்வகையில் உமது வேலை தனியாளினதும் சமுதாயத்தினதும் நன்னிலைக்கு மறு மொழி கூறுகின்றது.
3. உள சமூக நன்னிலை மேம்பாட்டை ஏற்படுத்தும்வகையில் உமது வேலையின் நோக்கங்களும் குறிக்கோள்களும் எவை?
4. எவ்வாறு உமது வேலைக் கூடாக நீர் உள சமூக நன்னிலையில் தாக்கத்தை ஏற்படுத்த உள்ளீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள சமூக வேலைகளுக்கான மூன்று அணுகுமுறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள சமூக அணுகுமுறைகள்[1]

கீழே வழங்கப்படும் மூன்று அணுகுமுறைகளும் போட்டியாளர்கள் அல்ல பதிலாக ஒன்றை ஒன்று முழுமையாக்குபவையாகும். இலங்கையில் உளசமூக வேலைகளை முழுமையான எண்ணக்கருவாக்கத்தையும் விருத்தி செய்வதற்கு இம் மூன்று அணுகு முறைகளும் இணைந்து உதவும். முக்கோண கூம்பக வடிவிலான சட்ட வரைபு வெவ்வேறு படையில் உள்ள உளசமூக ஆதரவில் பெருமளவில் அல்லது சிறிய அளவில் பாதிக்கப்பட்ட மனிதருக்கு உதவி வழங்கும் தேவையை எடுத்துக்காட்டினாலும் ஒவ்வொரு பிரிவிலும் தேவைப்படும்

உளசமூக உளசெயல் எல்லைகள் குறைவாகவே கூறப்பட்டுள்ளது. செயல் எல்லைகள் பற்றி குறிப்பாக மிகக் குறைவாகவே கூறப்பட்டுள்ளது. செயல் எல்லை மாதிரிகள் இவ் இடைவெளியை நிரப்புவதோடு தனிப்பட்ட விளைவுகள் தலையீடுகள் பற்றி நினைத்துப் பார்க்கவும் சமூக கலாச்சார பொருள் அடிப்படை ஆதரவுகள் பற்றிய பங்களிப்புகள் பற்றியும் கூறுகின்றது. இப் பல்துறைசார் குறுக்குவெட்டு அணுகுமுறையானது உளசமூக கூறுகளை பல்வேறு மனிதாபிமான அடிப்படையிலான வேலைகளுக்குள் ஒன்றிணைக்கும் அணுகுமுறையுடன் எதிரொலிக்கின்றது.

இச்சட்ட வரைபுகளின் மேலதிக அனுகூலம் யாதெனில் இவை சரியான முறையில் மாற்றியமைக்கப்படுமிடத்து இலங்கையில் உளசமூக வேலைகளுக்குப் பொருத்தமாக இருப்பதுடன் மற்றும் உலக நாடுகளில் நடைபெறும் உளசமூக வேலைகளுடனும் இணைகின்றது. இவை இலங்கையில் உளசமூக வேலைகளின் விரிவை பரிசீலித்துப் பார்ப்பதற்குரிய அத்திவாரமாக அமைகின்றது.

**தலையீட்டு முக்கோண கூம்பகம்**




[1] இந்தப்பகுதி யுக்திகள் பற்றிய நீண்ட ஒரு பயிற்சிப்பட்டறைபற்றி பேராசிரியர் மைக்கல் வசலி-னால் எழுதப்பட்ட அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையீட்டு முக்கோண கூம்பகம் (Intervention Pyramid)

பொருத்தமான இலக்குக் குழுக்களை இனம் காண்பதற்குரிய கருவியாகவும் மனிதாபிமான அல்லது அபிவிருத்தி ரீதியான வேலைகளுக்குப் பொருத்தமான பல்வேறு தலையீடுகள் பற்றியும் எவ்வகையான ஆதரவு தேவை என்பது பற்றியும் எதிர்நோக்குகின்றது.

**கூம்பகத்தின் அதிமேல் மட்டம்** (level) கடுமையாகப் பாதிக்கப்பட்டு உணர்வு ரீதியாக துன்பப்படுவோரை அல்லது தமது பொறுப்புக்களைப் பூர்த்தியாக முடியாமல் அவதியுறுவோரைக் கொண்டுள்ளது. இம்மட்டத்தில் உள்ளோருக்கு தீவிர (intensive care) சிகிச்சைத் தலையீடுகள் அல்லது உளவளத்துணை போன்றவை தேவைப்படும். **முக்கோண கூம்பகத்தின் மத்தியில் உள்ள** மட்டத்தில் இருப்பவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் தொழிற்படக்கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால் இவர்களும் பாதிக்கப்பட்டவர்களே. இவர்களுக்கு உதவி கிடைக்காவிடில் பெருமளவில் பாதிக்கப்பட்ட நிலைக்கு வரக் கூடிய ஆபத்து உண்டு. இம்மட்டத்தில் ஆபத்துக்குள்ளாகக்கூடிய பிள்ளைகள் அதாவது பெற்றோரைப் பிரிந்தோர் அங்கவீனமுள்ள வளர்ந்தோர் சிறுவர் பாலியல் வன்முறைக்குள்ளாகித் தப்பியோர் ஆபத்துக்குள்ளாகும் அல்லது துஷ்பிரயோகிக்கப்படக்கூடிய பிள்ளைகளை காணப்படுவர். ஆபத்துக்குள்ளாகக் கூடிய பெண்கள் ஆண்கள் வயது முதிர்ந்தோர் ஆகியோரும் இப் பிரிவில் காணப்படுவர். இப் பிரிவில் உள்ளோர் அநேகமாகச் சமுதாயம்சார் அல்லது முறைசாராத ஆதரவுகள் பாதுகாப்புச் செயற்பாடுகள் போன்றவற்றிற்கூடாக நன்மைகளைப் பெறுகிறார்கள்.

**அடிமட்டத்திலுள்ளோர்** மிகப் பெரிய குழுவினர் இவர்களுள் அதிர்ச்சிக்குள்ளானோர், துன்பத்திற்குள்ளானோர், பொருளாதார இழப்படைந்தவர் போன்றோர் உள்ளடங்குவர். இவர்கள் மீள்தகவு உடையோர் ஆவர். சமுதாய ரீதியில் ஓரளவு தாமே தொழிற்படக் கூடியவர்கள். பொருளாதார அரசியல் நிலமைகளின் திருத்தங்களை செய்வதற்கூடாகவும் கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கு ஊடாகவும் வருமானம் ஈட்டக்கூடிய வேலைகளை வழங்குவதற்கூடாகவும் சமுதாயங்களில் அடிப்படைத் தேவைகளைப் பெறும் வண்ணம் இயலுமையை கட்டியெழுப்புவதற்கூடாகவும் இவர்கள் நன்மைகளைப் பெறுவர்.

முக்கோண அணுகுமுறை வேற்றுமைகளையும் வேறுபட்ட அணுகுமுறைகளின் முழுமையாக்கும் தன்மையும் அங்கீகரிக்கின்றது. குறிப்பாக வெவ்வேறான முறைகளிற் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொருத்தமான வேறுபட்ட ஆதரவை வழங்கும் தேவையை இது உணர்த்துவதோடு யாவருக்கும் ஒரே அணுகுமுறையைப் உபயோகிப்பது எவ்வாறு பொருத்தமற்றது என்பதையும் காட்டுகின்றது. உதாரணமாக பாதிக்கப்பட்ட அனைவருக்குமே உளவளத் துணை வழங்க முடியாது. ஆனால் இது மேல்மட்டத்தில் உள்ளோருக்கு அவசியமில்லை. இதே போன்று மேல் மட்டத்தில் உள்ளோருக்கு சமுதாய அடிப்படையிலான அணுகுமுறைகளுக்கூடாக மாத்திரம் ஆதரவு வழங்குதல் பொருத்தமற்றது. இம்முறை அடிமட்டத்தில் உள்ளோருக்கே மிகப் பொருத்தம்.

எம்மட்டத்திலும் எவ்வேளையிலும் உணர்வு நிலைகள் எத்திரையிலும் செல்ல வாய்ப்புக்களுண்டு. மேல் மட்டத்தில் உள்ளோரின் நிலமைகள் திருந்தியதும் அவர்கள் சமுதாய அடிப்படையிலான செயற்பாடுகளுக்கூடாக நன்மை பெறக்கூடியதாக இருக்கும். நடு மட்டத்தில் உள்ளோர் பொருத்தமான உதவிகள் கிடைக்கப் பெற்றிருந்தால் தம்மை நல்ல நிலமைக்கு கொண்டுவந்திருப்பர். இவ்வாறான உதவி கிட்டாதிருக்கும் சந்தர்ப்பத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மேல்மட்டத்திற்கு செல்லக்கூடிய ஆபத்தை எதிர்நோக்குவர். அத்தோடு மத்திய மட்டம் அல்லது அடிமட்டத்திற்கு பொருத்தமான சமூதாய அடிப்படையிலான உதவிகளை வழங்குவோர் மிகவும் விசேடமான உதவி தேவைப்படும் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க நேரிடும். இருந்தாலும் மேல்மட்டத்தில் ஒரு சில அல்லது நிகழ்ச்சிகள் ஏதும் இல்லாதிருந்தால் வினைத்திறன் மிக்க கவனம் கிடைப்பது மிகவும் கடினம். எனவே இந்த முக்கோண அணுகுமுறை எண்ணக்கரு வெவ்வேறு வகையிலான அணுகுமுறைகளுக்கிடையில் சமநிலை காணப்படவேண்டிய தேவையையும் மட்டங்களுக்கூடாக இணைப்பு இருக்க வேண்டியதையும் காட்டுகின்றது. முக்கோண சட் வரைபு உபயோகமாக இருந்தாலும் இவ் எண்ணக்கருவில் குறைபாடுகளும் உண்டு. ஆபத்தை எதிர்நோக்குபவர்களையும் குறைபாடுடையோரையும் இச் சட்ட வரைபு நோக்குவதால் காணப்படும் வழங்களையும் மனிதரில் காணப்படும் சமாளிக்கும் திறன்களையும் கவனத்தில் கொள்ளாது விட வாய்ப்புண்டு. அத்தோடு இச் சட்ட வரைபு ஒவ்வொருவருக்கும் வெளி ஆதரவினால் நன்மைப் பெறுகிறார்கள் என எண்ணத் தூண்டும். ஆனால் சிறந்த உளசமூக ஆதரவு உள்ளூர் சமுதாயத்தில் உள்ளிருந்தே பெறப்படுகின்றது.

முக்கோண சட்ட வரைபு மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி மருத்துவ அடிப்படையால் சிந்திப்பதையே வரவேற்கின்றது. காரணம் தனிப்பட்டோரின் தாக்கத்தின் கடுமைத் தன்மையை நோக்குவதே ஆகும். சில நிலமைகளில் உதாரணமாக யுத்தப் பிரதேசங்களில் மருத்துவ ரீதியாக நோக்குவது பொருளாதாரப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதை வரையறைப்படுத்தும். அநேகமாக நீண்ட நாள் துஷ்பிரயோகம் ஏழ்மையும் பாகுபாடும் சமூக அல்லது அரசியல் ரீதியான துன்புறுத்தல் போன்றவை உளசமூக ஆதரவுத் தேவையை ஏற்படுத்தும். இருந்த போதும் தனிப்பட்ட உதவி பிரச்சினையின் அடிப்படைக் காரணங்களை எதிர் கொள்ளாது.

## உள சமூக பரப்பெல்லை (domains) அணுகுமுறை

சர்வதேச கல்விசார் (Academic) ஐந்து பங்குதாரர், ஐந்து அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியோரின் கூட்டாகிய உள சமூக வேலைக் குழு, உபயோகமான ஒரு உள சமூக சட்ட வரைபை (frame work) விருத்தியாக்கியுள்ளது. விபரங்களுக்கு (www.forcedmigration.org) ஐப் பார்க்கவும். உள சமூக வேலை மனிதரில் சமூகங்களில் கலாச்சாரங்களில் விழுமியங்களில் திருத்தங்களையும் ஆதரவையும் சட்ட வரைபு வலியுறுத்துகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள சமூக பரப்பெல்லை அணுகுமுறைகள்

பொருளாதார வளங்கல்

பௌதீக வளங்கள்




*THE PSYCHOSOCIAL CONCEPTUAL FRAMEWORK (PWG, 2004)*

மனித முதலீட்டுச் செயற்களம் கல்விக்கு ஆதரவு வழங்கும் முயற்சிகள், வேலை, உளநலம் வேறும் திறன்களையும் தொழிற்பாட்டையும் மேம்பாடடையச் செய்யும் நன்னிலை வழிகளை உள்ளடக்கியுள்ளது. தனியாட்களை செயற்படுத்துவதற்கூடாக சமூக விருத்தியை ஏற்படுத்துவதையும் உள்ளடக்கியுள்ளது. இருந்தபோதும் தனியாள் இயலுமை விருத்தி வெற்றிடத்தில் இடம்பெறுவதில்லை. மாறாக பிரதான சமூக உயிரின வாழ்க்கைச் சூழல் சார்பாகவே இடம் பெறக்கூடும். அதாவது குடும்பங்கள் சகபாடிகள் குழு சமுதாயங்கள் ஆகியோரின் ஆதரவுக்கூடாகவும் பாரிய அளவில் இனக் குழுக்கள் சமூக நிறுவனங்கள் போன்றவற்றிற்கூடாகவும் தனியாள் விருத்தி ஏற்பட முடியும்.

இவ் உயிரின வாழ்க்கைச் சூழல்கள் சிறந்த உள்ளூர் உளசமூக ஆதரவை வழங்கக்கூடியதாக இருக்கும் எனும் கருத்து உளசமூக ஆதரவு உள்ளூர் மக்களுக்கு வெளி முகவர்களால் வழங்கப்படும் ஒன்றல்ல என்பதை ஞாபகமூட்டுவதாக உள்ளது. எந்தவொரு சூழலிடமோ அல்லது சமுதாயத்திடமோ நிகழ்ச்சித்திட்டங்கள் ஆதரவு வழங்கி கட்டியெழுப்பிக்கக்கூடிய வளங்களைக் கொண்டிருக்கும்.

அநேகமான ஆதரவுகள் மரணச் சடங்குகள், சமய வழிபாடுகள், துக்கம் காத்தல் ,நோய் தீர்க்கும் கிரியைகள் போன்றவற்றில் காட்டப்பட்டுள்ளவாறு உள்ளூர் கலாச்சாரம் விழுமியங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. யுத்தத்தினால் குழம்பிய உள்ளூர் கலாச்சார நடைமுறைகள் உளச் சமூக ஆதரவை கடினமான சூழ்நிலைகளில் தாமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும். ஒரு செயற்களப் பரப்பை நோக்கும் நிகழ்ச்சி போதாது. முழுமையான ஆதரவிற்கு மூன்று செயற்களப் பரப்பிலும் ஆதரவுகள் ஒன்றுடனொன்று கலந்து வழங்கப்படுவது தேவைப்படும். வெளிக்கள மட்டக் கலந்துரையாடல்கள் இலங்கையில் இம்மாதிரியால் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதைக் காட்டியுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட மாதிரி சமூக தனியாள் உலக கருத்துக்களை உள்ளடக்கிய கலாச்சாரம் மற்றும் விழுமியங்களை உள்ளடக்கியதாகவும் ஒரு தனிப்பட்ட செயல்பரப்பை மட்டுமல்லாமல் செயல்பரப்புக்குப் புறம்பாக சகல வாழ்வுப் பின்னணியையும் உளசமூக வேலையையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட முடியாத தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் தமது உளசமூக நன்னிலையை பொருளாதார மேம்பாட்டை தீர்மானிக்கின்றது எனக் கருதுவதால் மாற்றியமைக்கப்பட்ட மாதிரி (adapted model) பிரதான பொருள் நன்னிலையை வழங்கும் செயற்பாடாக அமைகிறது. ஏனைய ஆயுத முரண்பாட்டுச் சூழல்கள் அழிவுகள் ஏற்பட்ட பிரதேசங்களில் கற்றுக்கொண்ட பாடங்களும் பொருள் ரீதியான நன்னிலையையே வலியுறுத்துகின்றன.

மாற்றியமைக்கப்பட் மாதிரியும் (model) சரி மாற்றத்திற்கு முற்பட்டதும் சரி செயற்பரப்பு அணுகுமுறை உளசமூக வேலைக்கான சந்தர்ப்பங்களில் உள்ள அதிகாரம் சுமைகள் பற்றிய சிந்தனையை வழங்க வழிகோலுகிறது. பாதிக்கப்பட்ட சமுதாயத்தில் ஒவ்வொரு செயற் பரப்பும் குழுவில் சரி எதிர்ப்பு பகுதியைக் கொண்டிருக்கும். இப்பகுதி மனிதாபிமான உதவி வழங்கும் சர்வதேச குழு அல்லது கொழும்பில் உள்ள குழுவாக இருக்கும். வெளியில் இருந்து ஒரு குழு (நாட்டின் எப்பகுதியில் இருந்தும்) பாதிக்கப்பட்ட உள்ளூர் சமுதாயத்துக்குள் வரும்போது அவர்கள் ஒரு தொகுதி கருவிகள், விழுமியங்கள் அணுகுமுறைகள் என்பவற்றைக் கொண்டுவருவார்கள். இவை குறிப்பிட்ட கலாச்சாரம் ஒரு தொகுதி சமூக உறவுகள் சமூக உயிரின வாழ்க்கைச் சூழல்கள் விழுமியங்கள் நன்னிலை பற்றிய எண்ணங்கள் என்பவற்றை பிரதிபலப்பதாக இருக்கும். உள சமூக வேலை நடாத்தப்படும் முறையை பொறுத்து அவை உள்ளூர் மக்கள் மீது திணிக்கப்படும். இந்நிலை உள்ளூர் மக்களை விரக்தியடையச் செய்யும். காரணம் அவர்கள் எதிர்பார்த்த வளங்கள் அவர்களுக்கு கிடைக்காமை. அதனால் உடனடி வலுவூட்டல்/அதிகாரம் தேவைப்படும் நிலையில் உள்ளவர்கள் வலுவிழக்க நேரிடும்.

இதே வேளை இவை பரஸ்பர கற்றலுக்கான ஒரு மூலமாகவும் அமையும். வெளியாட்கள் ஒரு வலுசீட்டல் மாதிரியை உபயோகித்து மதித்துக் கற்றுக்கொண்டவையூடாக உள்ளூர் கலாச்சாரத்திற்கும் விழுமியங்களுக்கும் ஆதரவு வழங்குவார்கள். உள்ளூர் மக்களும் வெளி அணுகுமுறைகளைத் தெரிவு செய்து கற்றுக்கொள்வார்கள். இதனூடாக இடைவெளிகள் நிரப்பப்பட்டு உள்ளூர் நடைமுறைகள் மேம்படுத்தப்படும். இவ் அணுகுமுறை ஒரு பங்குதார அணுகுமுறையை அண்மித்தது. உள்ளூர் மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு உளச் சமூக பிரச்சினைகளுக்கு உள்ளூர் உரிமை ஒன்றைப் பெற ஊக்கமளிக்கின்றது.

## ஒன்றிணைந்த அணுகுமுறை

குறிப்பாக உளசமூக தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக விருத்தியாக்கப்பட்டதாக உளசமூக வேலைகள் இருப்பதை விடுத்து, ஒரு ஒன்றிணைந்த அணுகுமுறையாக பல்வேறுபட்ட மனிதாபிமான அபிவிருத்தியை வழங்கும் பிரிவுகளின் வேலைகளுடன் உளசமூக கூறுகள் பின்னிப் பிணைந்து உள்ளது. இது தொடர்பாக உளசமூக உதவி ஒரு வேலை செய்வதற்கான உபாயம் அன்றி முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒரு தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் அல்ல.

உள சமூக நோக்கிலான வேலையை வடிவமைப்பில் ஒன்றிணைந்து மனிதாபிமான உதவி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதில் பின்வருவன தேவை. 1.குறித்த கொள்கைகளுக்கும் விழுமியங்களுக்கும் அர்ப்பணிப்பு.2. 'நடைமுறை Process ல் அழுத்தம். – தலையீடுகள் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் முறை. கைக்கொள்ளக்கூடிய கொள்ளைகளும் விழுமியங்களும் வலுசீட்டல் அதிகாரமளித்தல் நிலைப்பேறு சமூக இணைப்பு ஆகியவற்றிற்கு அர்ப்பணிப்பு வேற்றுமைகள் வேறுபாடுகள் என்பவற்றிற்கு மதிப்பளித்தல் மனிதரின் தன்மானம் சுய பெறுமதி என்பவற்றை கண்டுணர்தல் என்பவை ஆகும். ஒன்றிணைந்த அணுகுமுறை நிகழ்ச்சித் திட்ட நடைமுறைப்படுத்தல் உள சமூக ரீதியாக உணர்வுடையதாக இருப்பதை உறுதி செய்யும் வண்ணம் பின்வரும் வழிக்காட்டல் குறிப்புகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றது.

மக்களின் மீளும் தன்மை (Resilience) இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். ஆபத்துக்குள்ளாகக் கூடியவர்களில் முற்றுமுழுதான கவனத்தைத் தவிர்த்தல். ஒத்துழைப்பை உறுதி செய்தல் உரிமையைக் கட்டியெழுப்பல்:

சமுதாயங்களில் அதிகார உறவுகள் பற்றி விழிப்புணர்வுடன் இருத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் சமுதாயங்களின் மாறும் தேவைகளுக்கேற்ப நெகிழ்ச்சித் தன்மையும் பதில் கூறத் தக்கவை யாவும் உள்ளன என ஒன்றிணைந்த அணுகுமுறை உறுதியாகக் கூறுகின்றது.

உதாரணமாக உணவு உதவி வழங்கும் பொருத்தமானதொரு அணுகுமுறையில் மனிதாபிமான உள்ளூர் மக்களுக்கு கலோரித் தேவையை பூர்த்தியாக்கும் வகையில் சத்துணவு வழங்கும்போது அவர்கள் மனிதனின் வினைத்திறனையே அழுத்துகிறார்கள். இவ் அணுகுமுறை வலுசீட்டல் அதிகாரமளித்தலுக்கு முக்கியம் அளிக்காமல் பாதிக்கப்பட்வர்களை நெருக்கடி மத்தியிலும் அபிமானத்துடன் வாழக்கூடியவர்கள் எனக் கொள்ளாமல் ஆடு, மாடு போன்று நினைக்கிறார்கள். உணவு வழங்கலில் சிறந்த வீட்டு முகாமையாளர்களாக விளங்கும் பெண்களை உணவு வழங்கள் நடவடிக்கையில் ஈடுபடுத்தினால் அவர்களை வலுசீட்டி அதிகாரம் வழங்கியதாக அமையும். அதிகாரம் அளிக்கும் அணுகுமுறை நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துவதோடு உளசமூக ஆதரவும் வழங்குகிறது. ஏனெனில் துயரில் இருந்து மீள்வதற்கு ஒருவருடைய சுய கட்டுப்பாட்டு உணர்வு உறுதி செய்யப்பட வேண்டியது முக்கியம். கூட்டான திட்டமிடல் செயற்பாடு என்பவற்றிற்கூடாக குழுக்கள் கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்று எம்மால் கஷ்டங்களில் இருந்து மீள முடியும் எனும் உறுதியை பெறுகின்றனர். ஒத்த உதாரணங்கள் ஏனைய மனிதாபிமான வேலைகளுக்கும் பொருந்தும். உதாரணம் வீட்டு வசதிகள், குடி நீரும் சுகாதாரமும், சிறு நிதி வழங்கல் வாழ்க்கைத் தொழில் செயற்பாடுகள் போன்றவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடலுக்கான வினாக்கள்

1. நீங்கள் சேவையாற்றும் சமுதாயங்களில் உளசமூக நன்னிலைக்குப் பதில் கூறவும் நன்னிலையைப் புரிந்துகொள்ளவும் எவ்வணுகுமுறை சிறந்தது என நினைக்கிறீர்?
2. உங்கள் வேலைக்கு மேலானது என நீர் நினைக்கும் கொள்கைகளும் விழுமியங்களும் யாவை?
3. உங்கள் நிறுவனத்தின் ஏனைய அணுகுமுறைகளை உளசமுக அணுகுமுறை எவ்வாறு முழுமையாக்குகின்றது. உதாரணமாக மனித உரிமைகள், பால், சிறுவர் உரிமைகள், கெடுதி செய்யாமை (do- no- harm) முரண்பாடுகளுக்கான உணர்வுகள் காட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளசமூக நன்னிலையை மேம்படுத்தும் தலையீடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

உளசமூக நன்னிலை மேம்படுத்தப்பட்டு துயர் குறைக்கப்பட்டு இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பல்வேறு தலையீடுகள் பிரதிபலிப்பதை பார்க்குமிடத்து இலங்கையில் மிகவும் செழிப்பான உளசமூக வேலைக் கலாச்சாரம் உண்டு என்பது தெரிகிறது. பல வருட கடின உழைப்பின் மூலம் அரசு சிவில் சமூகம் சர்வதேச சமுதாயம் யாவற்றிலும் உள்ள வேறுபட்ட சேவையாளர்கள் தனியாட்கள் யுத்த முரண்பாடு ஏழ்மை அனர்த்தங்கள் வேறும் துயருறும் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களுக்காக பல்வேறு வேலைகளைச் செய்துள்ளார்கள். அநேகமான முயற்சிகள் குறித்தவொரு குழுவையே நோக்கியுள்ளது.- சிறுவர் தாரமிழந்த பெண்கள் அல்லது இளைஞர்கள் இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுள் "உள சமூகவியல்" ஒரு உப பிரிவாக உள்ளது. சுகாதாரம் வாழ்க்கைத் தொழில் போன்றவற்றிலிருந்து வேறுபட்டதாகக் கொள்ளப்படுகிறது.

இலங்கையில் உளசமூக திட்டமிடல் பல்வேறு வகையான தலையீடுகளை உள்ளடக்கியுள்ளது. முற்று முழுதாக உளவியல் சார்ந்ததில் இருந்து (அதாவது உள வளத்துணைச் சேவை) நன்னிலை மேம்பாட்டிற்கான பொருள் உதவி வழங்கல் போன்ற சமுதாய அடிப்படையிலான தலையீடுகளை உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் உளசமூக தலையீடுகள் பலவாறானவையாக உள்ளமையால் எவ்வகையான தலையீடு என்பது பற்றிப் பேசுவது மிக முக்கியமாக உள்ளது. மேலெழுந்தவாரியாக 'உளசமூக செயற்பாடுகளை நடாத்துதல்' பற்றிப் பேசுவது தலையீடு பற்றிப் போதுமான அளவுக்கு விபரிப்பதற்குப் பதிலாக குழப்பத்தையே ஏற்படுத்தும். குறிப்பிட்ட வகையான தலையீட்டைப் பெயரிடும்போது கூடிய தெளிவு ஏற்படும்.

இலங்கையில் உள்ள பொதுவான தலையீடுகளாவன சிநேகபூர்வமாக உதவுதல், (befriending) உளவளத் துணை செயல் ரீதியான உதவிக்கான வாய்ப்பு சமூக ஆதரவையும் வலைப் பின்னலையும் மேம்படுத்துதல். இப்பதங்களுடன் கூட சில மயக்கங்கள் உண்டு. மக்களுக்குத் தலையீடுகளை பெயரிடுவதில் அதாவது சிநேகமயமாதலுக்கும் உளவளத் துணைச் சேவைக்கும் வேறுபாடு காணல் கடினம். அண்மைக் காலங்களில் உளசமூக சூழல் ஒரு தலையீடா (intervention) அல்லது அணுகுமுறையா (approach) எனும் விவாதம் நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. உளசமூகத் தலையீடுகளை உள உடநலத் திட்டங்கள் அல்லது வாழ்க்கைத் தொழில் தலையீடுகளில் இருந்து வேறுபடுத்தி வரைவிலக்கணப்படுத்துவதற்குப் பதிலாக 'உளசமூகம்' என்பதை அபிவிருத்திக்கும் மனிதாபிமான தலையீடுகளுக்குமான ஒரு அணுகுமுறையாக கொள்ள வேண்டுமென முன்மொழியப்பட்டது. உளசமூக வேலை இலங்கையில் மற்றைய நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து அவ்வளவாக மாறுபட்டது இல்லை என வாதிடப்பட்டது. இருந்தபோதும் உளசமூக அணுகுமுறை என்பது ஒரு செயற்பாடு அல்லது தலையீடு நடாத்தப்படும் நடைமுறை பற்றியது என வலியுறுத்தப்பட்டது. அதாவது ('process through which') என்பதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இந் நடைமுறை தெளிவாக உள்ளதன் காரணம் விழுமிங்கள் கொள்கைகளுக்கு கட்டுப்பட்டு உள சமூக நன்னிலையை பாதுகாத்து மேம்படுத்தலாம் என்பதாகும். பொதுவான உள சமூகத் தலையீடுகள் சில கீழே விபரிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிநேக பூர்வமாக உதவுதல்/ஆதரித்தல் (Befriending)

'சிநேகத்துடன் உதவுதல்' என்பது ஒரு உளசமூக தலையீடு அக்கறைக் கொள்ளும் மனப் பாங்கை உள்ளடக்கியது. உதவி வழங்கும் தனியாள்களின் நாளாந்த வாழ்க்கையில் உதவுதல்.

சிநேகபூர்வமாக உதவுதல் என்பது.

- துடிப்பான செவிமடுத்தல் : குழப்பத்தில் உள்ளோர் அல்லது துயருற்றிருப்போர் தமது பிரச்சினைகளை எடுத்துக்கூற உதவுதல்.
- விளையாட்டுச் செயற்பாடுகள் : உதவி வழங்குபவர்கள் தமது உத்திகளுடன் விளையாட்டுச் செயற்பாடுகளை சேர்த்துக்கொள்வர். இதனூடாக வளர்ந்தோரினதும் சிறுவர்களினதும் அழுத்தங்கள் குறைக்கப்படும். (விளையாட்டுச் செயற்பாடுகள் பற்றி மேலும் அறிந்துகொள்ள கீழே பார்க்கவும்.)
- உணர்வு ரீதியான ஆதரவு : ஒழுங்கான தொடர்புகள் உறவுகளுக்கூடாக சிநேகபூர்வமான ஆதரவான பாதுகாப்பான ஆதரவை மக்களுக்கு சிநேகபூர்வ உதவியாளர்கள் வழங்குவர். மீளும் சக்தியையும் எதிர்கொண்டு சமாளித்தலையும் உயர்த்துவது நோக்கமாக இருக்கும்.
- செயல் ரீதியாக உதவி : நாளாந்த கஷ்டங்களிலும் இடர்பாடுகளிலும் பொருத்தமான தகவல்களை வழங்குவர்.(மேலும் தகவல்களைக் கீழே பார்க்கவும்)
- கலந்து பேசுதல் (Referrals) : மேலதிக சேவைகளை இனம் கண்டு தேவையேற்படும்போது மக்களைப் பொருத்தமானவர்களிடம் கலந்தாலோசிக்க அனுப்புவர்.

சிநேகபூர்வமான உதவுதல் உளவளத்துணை அல்ல. உளவளத் துணை போன்றல்லாது சிநேகபூர்வ உதவி குறைவான முறைசார் கட்டமைப்பைக் கொண்டது. (கீழே உளவளத் துணைப் பகுதியை மேலதிக விபரங்களுக்குப் பார்க்கவும்.) இதற்கு குறைந்தளவு பயிற்சியே அவசியம். இருந்தபோதும் சிநேகபூர்வ உதவியாளர்கள் ஏனைய உள சமூக சேவையாளர்களைப் போன்று ஒரே மாதிரியான வேலை ஒழுக்கத்திற்கு கட்டுப்பட்டவர்களாவர். (சிறந்த உள சமூக வேலை நடைமுறைகளுக்கான வழிகாட்டல் குறிப்புகளைப் பார்க்கவும்)

## உளவளத் துணை (Counselling)

உளவளத்துணை என்பது தனியாள்கள் குழுக்கள் பயனுறுதிமிக்க வகையில் தமது கஷ்டங்கள் துயர்களில் இருந்து விடுபடுவதற்கு வழங்கப்படும் முறைசார் கட்டமைப்பு ரீதியான உதவியாகும். விசேடமான திறன்கள் உத்திகள் என்பவற்றைக் கொண்டதுமாகும். இம்முறைசார் நடைமுறையோடு உளவளத்துணைச் சேவைகள் அந்தரங்கமான சூழலில் இரகசியம் பேணல் உறுதி செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

இப் பதத்தின் பிரபல்ய உபயோகத்திற்கு மாறாக உளவளத்துணை அறிவுரைகள் வழங்குவதல்ல. மாறாக உளவளத்துணை மக்கள் தமது கஷ்டங்கள் துயர்களிலிருந்து தம்மை விலக்கிக்கொள்வதற்கான தம்மைப் பற்றிய புரிந்துணர்வு, தம் நிலமைகள் பற்றிய புரிந்துணர்வு என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்படும் உதவியாகும். உதவி பெறுபவர்களே தமக்கான தீர்மானங்களை எடுப்பர். எனவே உளவளத்துணை சரியான முறையில் வழங்குவதற்கு உளவளத்துணை வழங்குனருக்கு போதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு பயிற்சி அவசியம். அப் பயிற்சி அவர்கள் உளவளத்துணை நடைமுறைபற்றி அறியவும், உளவளத்துணை திறன்களையும் உத்திகளையும் பாவிக்கவும் வெவ்வேறு உளவளத்துணை அணுகுமுறைகளைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது. அதே நேரத்தில் அவர்கள் மனித நடத்தை உணர்வுகள், சிந்தனைகள் என்பவற்றிற்கு ஒத்துணர்வை விருத்தி செய்வது தேவைப்படுகிறது. ஒரு அனுபவமுள்ள மேற்பார்வையாளரிடம் உளவளத்துணை வழங்கவோ ஒழுங்கான வழிக்காட்டலைப் பெறுதல் அவசியம். சரியான முறையில் பயிற்றப்பட்டு மேற்பார்வைச் செய்யப்படாவிட்டால் உதவி பெறுபவர்களுக்கு நன்மை செய்வதற்கு பதிலாக தீமையையே அவர்கள் செய்ய நேரிடும்.

உளவளத்துணை பலவகையான வெவ்வேறு சூழ்நிலைகளில் உபயோகிக்கப்படுகின்றது. அச் சூழல்களாவன தனியாள் வீடுகள், சமுதாய நிலையங்கள், தனியாள் நடைமுறை கிளினிக்குகள், வைத்தியச்சாலைகள் மற்றும் பாடசாலைகள். உளவளத்துணை ஒருவருடன் ஒருவரான முரண்பாடுகள் அல்லது துயர் என்பவற்றை அனுபவிக்கும் தனியாள்கள் கணவன் மனைவி குடும்பங்கள் யாவருக்கம் வழங்கப்படுகின்றது. இதே மாதிரியான பாதிப்புக்குள்ளாகிய குழுக்களுக்கும் உளவளத்துணை வழங்கப்படுகின்றது.

**எண்ணக்கரு சம்பந்தமான சிறுபுத்தகம் சம்பவக்கற்கை – பாதுகாப்பும் மீள்புனர் நிர்மாணமும் ஒன்றிணைப்பும்.**

**பின்னணி**

*2004* ஏப்பிரல் மாதத்தில் இலங்கையில் உள்ள ஆயுதக் குழு ஒன்றுடன் இருந்த *1800* க்கு மேற்பட்ட பிள்ளைகள் ஓர் இரவுக்குள் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களுள் லக்ஷ்மி[1] ஒருத்தி. அவள் சிறுபிள்ளையாக உள்ளீர்க்கப்பட்டு ஆயுதப்படை வீரராக பதிவு செய்யப்பட்டு இராணுவப் பெயரும் வழங்கப்பட்டது. ஆயுதக் குழுக்களில் பதிவு செய்யப்படும் பெண் பிள்ளைகளுக்கு நடைபெறுவதுபோன்று அவளது நீண்ட கூந்தல் கழுத்தளவிற்கு வெட்டப்பட்டது. ஆயுதக் குழுக்களில் உள்ள பெண் பிள்ளைகளை இனங் காண்பதற்கு கையாளப்படும் நுட்பம் இது. அத்தோடு முடிவெட்டியிருத்தல் பெண் பிள்ளைகளுக்கு ஒரு அச்சுறுத்தலாகவும் இருந்தது. காரணம் தாம் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என ஒதுக்கப்படுவார்கள் என்பதாகும். லக்ஷ்மியின் தந்தை இறந்துவிட்டார். ஆகையால் அவளின் தாயாரும் இளைய சகோதரியும் அவளது திருமணமாகிய பிள்ளைகளையுடைய மூத்த சகோதரியுடன் வாழ்ந்தார்கள். அவர்களது பண நிலை மிகவும் மோசமானது. லக்ஷ்மியின் சகோதரியின் கணவனின் வருமானத்திலேயே அவர்கள் தங்கியிருந்தார்கள்.

லக்ஷ்மிக்கு பாடசாலைக்குத் திரும்பிச் செல்வதே மனதில் விருப்பம். இரண்டு வருடங்கள் படிப்பைத் தவறவிட்டுவிட்டாள். பாடசாலைக்குத் திரும்பிச் சென்றால் அவளை விட இரு வயது குறைந்தவர்களுடனேயே கற்க நேரிடும். அவளுடைய தலைமுடி வெட்டப்பட்டிருப்பது அவளை ஆயுதக் குழுவில் இருந்து தப்பியவள் என இனம் காட்டிவிடும். பாடசாலையில் பழிப்புக்குள்ளாக நேரிடும். ஆசிரியர்களினால் பாகுபாடு காட்டப்படுவாள் எனும் எண்ணங்கள் மனதில் ஓடியது. தான் எதிர்நோக்கப்போகும் பழிப்புப் பற்றிய எண்ணம் அவளுக்கு மிகவும் மன அழுத்தத்தைக் கொடுத்தது ஆகையால் பாடசாலைக்குத் திரும்பிச் செல்வதில்லை என அவள் தீர்மானித்தாள்.

இரகசியத்தைப் பேணுவதற்காக அனைத்து நிறுவனங்களினதும் தனிநபர்களினதும் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. சம்பவக்கற்கைநெறியில் உள்ளடக்கிய தகவல்கள் அனைத்தும் உண்மை நிகழ்வுகளாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏன் தலையிட வேண்டும்**

இவ்வாறான நிலையில் லக்ஷ்மி ஒருத்தி மட்டும் இல்லை. ஆயுதக் குழுவிற்கு சேர்த்துக்கொள்ளப்படுவது பிள்ளையில் நீண்டகாலமாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பல பிள்ளைகள் ஆயுதபோராட்டத்தில் பங்குகொள்வதற்கு வற்புறுத்தப்பட்டுள்ளார்கள். இதன் விளைவாக பல பாரதூரமான வன்முறைகளை அவர்கள் கண்டுகொள்ள நேரிடுகிறது. ஆயுதக் குழுவில் இருந்து பிள்ளை மீட்கப்பட்ட பின்பும் பிள்ளை சமூகத்தை வேறாகப் பார்க்கின்றது. சமூகமும் பிள்ளையை வேறாகப் பார்க்கின்றது. இவ்வாறான பிள்ளைகளை ஒழுக்கமற்றவர்கள், வன்முறைகளுக்குள்ளாகக்கூடியவர்கள், படிப்பில் அக்கறையற்றவர்கள் என நோக்குவதோடு இவர்கள் ஆயுதக் குழுவின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடியவர்கள் எனவும் நோக்கப்படுகிறார்கள். தொடர்ந்தும் ஆயுதக் குழுவுடன் தமது தொடர்புகளை வைத்துக்கொண்டிருப்பார்கள் எனவும் நோக்கப்படுகிறார்கள். ஆனால் பெரும்பாலான பிள்ளைகள் இவ்வாறில்லை. பிள்ளையை சந்தேகக் கண்ணோடு நோக்குவதோடு இவள் பிரச்சினை உருவாக்கக் கூடியவள் எனவும் எண்ணப்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மிகவும் ஒழுங்கான படிப்படியான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கூடாகவே பிள்ளையின் நோக்கையும் சமூகத்தின் நோக்கையும் மெதுவாக மாற்றலாம்.

**தலையீடு**

பெருமளவிலான இந்த விடுவிப்பு ஏற்பட்டபோது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்று தமது உத்தியோகஸ்தர்களையும் விடுவிக்கப்பட்ட பிள்ளைகளை உடனடியாக பதிவு செய்வதில் ஈடுபட்டிருந்த பங்குதாரர்களையும் ஒன்று திரட்டியது. மாவட்டங்களில் நடமாடும் பதிவு செய்யும் மையங்கள் பல நிறுவப்பட்டன. இவை பிரதானமாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் நிறுவப்பட்டு விடுவிக்கப்பட்ட பிள்ளைகள் பற்றிய விபரங்கள் பதிவுசெய்யப்பட்டது. லக்ஷ்மியின் விபரங்கள் பதியப்பட்டு பிள்ளைகளுக்கான சமூக சேவை செய்யும் ஒரு பங்குதார நிறுவனமொன்றிடம் கையளிக்கப்பட்டது.

பங்குதார நிறுவனத்தின் உத்தியோகஸ்தர்கள் லக்ஷ்மியின் தேவைகளையும் அவள் வாழும் சூழலின் தேவைகளையும் அறிந்துகொள்வதற்காக ஆரம்பத்தில் ஒரு வருகையை மேற்கொண்டார்கள். இரண்டு சமூக சேவையாளர்கள் லக்ஷ்மியுடனும் அவளுடைய குடும்பத்துடனும் கலந்துரையாடல்களை நடத்தினார்கள். சமூக சேவையாளர்கள் லக்ஷ்மியை சந்தித்தபோது அவர்களது கையில் இரண்டு பெரிய காரியங்கள் (task) இருந்தன. ஒன்று லக்ஷ்மியை அவளது பயத்திலிருந்து விடுவித்து பாடசாலை செல்லும்படி தூண்டுதல். இரண்டாவதாக பாடசாலையை லக்ஷ்மியை உள்வாங்கிக்கொள்ள தயார்படுத்தல். அதாவது லக்ஷ்மி போன்ற ஆயுதக் குழுவில் இருந்து திரும்பிய பிள்ளைகளை வேறான கண்ணுடன் பார்த்தலை பாடசாலைச் சமூகம் மாற்ற வேண்டும். அத்துடன் இரு வருடங்கள் தவறவிட்ட பாடசாலைப் படிப்பை லக்ஷ்மிக்கு வழங்க முன் வருதல் வேண்டும்.

சமூக சேவையாளர்கள் லக்ஷ்மியின் வீட்டிற்கு பலமுறைகள் சென்று அவளுடனும் அவளது குடும்பத்தாருடனும் கலந்துரையாடினார்கள். அவர்கள் லக்ஷ்மியின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் விருத்தி செய்து அவள் சாதாரண பழைய வாழ்வுக்கு திரும்புவதற்கு குடும்பத்தார் வழங்கக்கூடிய ஒத்துழைப்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பினார்கள். லக்ஷ்மி செல்ல வேண்டிய பாடசாலைக்கு அவர்கள் சென்று அதிபருடனும் ஆசிரியர்களுடனும் கலந்துரையாடி லக்ஷ்மியை மீண்டும் பாடசாலையில் சேர்த்துக்கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தையும் விழிப்புணர்வையும் வழங்கினார்கள். பாடசாலையில் லக்ஷ்மியை இணைப்பதானால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினார்கள். அத்துடன் கையாளக் கூடிய வழிமுறைகள் பற்றியும் உணர்த்தினார்கள். லக்ஷ்மி பாடசாலை செல்ல தயாராகினாள். பாடசாலையும் அவளை வரவேற்கத் தயாராக இருந்தது.

ஆரம்ப நாட்கள் சில கடினமாகத் தான் இருந்தது. சரிப்படுத்திக்கொள்ள வேண்டிய நடைமுறைகளும் கற்றுக்கொள்ள வேண்டிய நிலைப்பாடுகளும் இருந்தன. ஆனால் நிலமை மிகவும் விரைவில் சுமுக நிலையை எய்தியது. பாடசாலையில் லக்ஷ்மி ஏனையவர்களைப் போன்றே இருந்தாள். இழந்த வாழ்வை மீளப் பெற்றுக்கொள்வது அவளது பெரும் ஆவலாக இருந்தது மாத்தரமே ஒரு வேறுபாடு.

GCE O/L பரீட்சையை சிறந்த பெறுபேறுகளுடன் சித்தியடைந்தாள். நாம் அவளைக் கடைசியாகச் சந்தித்தபோது அவளும் அவளது சகோதரியும் A/L செய்து கொண்டிருந்தாள். அவளது வாழ்வு வழமைக்கு திரும்பியுள்ளது. அவள் சந்தோஷமாக இருந்தாள்.

**நிறுவனங்களால் வழங்கப்பட்ட சேவைகளின் மேற்கண்ணோட்டம்**

18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கெதிராக தொழிற்படும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் வேலைகள் முழுமையானது. அவர்களது மாவட்ட மட்ட வலைப்பின்னலுக்கூடாக தடுப்பு நடவடிக்கைகளில் ஆரம்பித்து தொடர்ந்து செயற்படுகிறார்கள். பிள்ளைகளை ஆயுதக் குழுக்கள் சேர்ப்பதில் உள்ள ஆபத்தும் பிள்ளையின் வாழ்வை இது எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றிய விழப்புணர்வை ஏற்படுத்துவதில் இவ் வலைப்பின்னல் கடுமையாகப் பாடுபடுகிறது. இந்நிறுவனம் இவ்வாறான பிள்ளைகளை விடுவிக்கப்படுவதை தூண்டுவதோடு அதை மேற்பார்வை செய்கின்றது. பிள்ளைகளின் தேவைகளைப்பொறுத்து இச் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் பல பங்குதார முகவர்களுடன் இணைந்து பல சேவைகளை வழங்குகின்றது. இழந்த கல்வியை மீட்டல், உளவளத்துணை தொழில்சார் பயிற்சி போன்ற சேவைகளும் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளும் வழங்கப்படுகின்றது.

## விளையாட்டுச் செயற்பாடுகள்

விளையாட்டுச் செயற்பாடுகள் இலக்குக் குழுக்களுக்கு வழங்கப்படும்போது ஓய்வு நேரச் செயற்பாடுகள் வடிவத்தை எடுக்கின்றது. இவை மீளும் தன்மையையும் தளர்வையும் (Relaxation) வழங்கும் நோக்குடையவை. பல விளையாட்டுச் செயற்பாடுகளும் குழு விளையாட்டுகளும் சமூகத் திறன்களைக் கற்பிக்கின்றன. இதனூடாக வலைப்பின்னல்கள் கட்டியெழுப்பப்பட்டு உள விருத்தி மேம்படுத்தப்படுகிறது.

விளையாட்டுச் செயற்பாடுகள் இலகுபடுத்துவோரினால் ஒழுங்கமைக்கப்பட்டு உள்ளூர் சமுதாயங்கள் அல்லது சிறுவர் நிலையங்களில் வழங்கப்படுகின்றது. பிள்ளைகளுக்கு கட்டமைப்பு ரீதியில் நேரம் வழங்கப்படும். இந் நேரத்தில் அவர்கள் விளையாட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வல்லுனர் போட்டிகள் அல்லது ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபட வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றது. சில நேரங்களில் பிள்ளைகள் சுயமாக விளையாட அனுமதிக்கப்படுவர்.

விளையாட்டுச் செயற்பாடுகள்:

- குழு விளையாட்டுக்களும் மெய் வல்லுனர் விளையாட்டுக்களும்: வெவ்வேறு வயதுப் பிள்ளைகளுக்குப் பல்வேறுபட்ட விளையாட்டுச் செயற்பாடுகள் உண்டு.
- விளையாட்டுக்களை இலகுபடுத்துவோர் இதைப்பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.
- இணைந்த செயற்திட்டங்கள்: வயது வந்த பிள்ளைகள் இணைந்து செயற்திட்டங்களைச் செய்ய ஊக்கமளிக்கப்படுவர். உதாரணம் தாவரங்கள் வளர்த்தல், சிறுவர்களுக்கான நூலகம் நடாத்துதல், மெய்வல்லுனர் நிகழ்ச்சிகள், விவாதங்கள் போன்றன ஒழுங்குபடுத்தல் போன்றவை. இவர்களுக்கு இலகுபடுத்துனர்கள் (Facilitators) உதவுவர்.
- பாடல்கள் நாடகமும் கலைகளும்: பிள்ளைகளுக்கு பாட்டுகள் சங்கீதம் வரைதல் அல்லது நடித்தல் போன்றன பாட கற்பித்தலுக்கூடாக அவர்களின் ஆக்கத் திறன் வெளிப்பாட்டிற்கு உதவி வழங்கப்படும்.
- சுய விளையாட்டு: பிள்ளைகளை தமது கற்பனைக்கும் முயற்சிக்கும் அமைய சுதந்திரமாக விளையாட அனுமதித்தல். இது மிகவும் முக்கியமானது.

உண்மையில் விளையாட்டு நேரம் முக்கியமாக இருக்கும் அதே வேளையில் இலகுபடுத்துனருக்கும்பிள்ளைகளுக்கும் இடையிலான மற்றும்பிள்ளைகளுக்குமிடயிலான இடைத் தொர்புகளின் தரம் இத் தலையீட்டின் உளசமூகத் தாக்கத்தை தீர்மானிக்கின்றது. செயற்பாட்டை ஒரு போட்டியாக மாற்றுவது அல்லது பிள்ளைகளில் விருப்பு இல்லாதிருத்தல் உளசமூகத் தாக்கத்தைக் குறைக்கின்றது. அன்பு, சிநேகம் பிள்ளையின் நலத்தில் நாட்டம் உளசமூகத் தாக்கத்தை உயர்த்துகிறது.

**எண்ணக்கரு தெளிவு தொடர்பான சம்பவக் கற்கை – ஒன்றிணைந்த உளவளத் துணை.**

**பின்னணி**

குமாரி[2] என்பவள் இலங்கையில் வட மாகாணத்தில் 16 வயதுடைய பெண் பிள்ளையாவாள். 5 வருடங்களுக்கு முன் அவள் தன் பெற்றோரை ஒரு குண்டு வெடிப்பில் இழந்து விட்டாள். அவளுடைய இரண்டு சகோதரிகள் கொழும்பில் தற்சமயம் வசிக்கிறார்கள். குமாரி தனது சகோதரியுடனும் கணவனுடனும் நலன்புரி நிலையமொன்றில் வசிக்கிறாள். ஆண்டு 11 வரை கற்றிருக்கிறாள். சந்திரன் எனும் ஒரு பையனுடன் குமாரி ஒரு தொடர்பினை ஏற்படுத்தினாள். அவளது சகோதரியும் கணவனும் இதை ஏற்றுக்கொள்ள மறுத்து அவளை அடித்து கொழும்பு சென்று படிப்பைத் தொடரும்படி கட்டளையிட்டார்கள். குமாரி சந்திரனின் தூண்டலின் பெயரில் அவனின் வீட்டில் வசிக்கச் சென்றாள். சந்திரனின் தாயாரும் இதை விரும்பாமல் சந்திரன் வேலையில் இருக்கும்போது குமாரியை உடல் ரீதியாக துன்புறுத்தினாள். தாயார் குமாரி சீதனம் தரவேண்டும் என வற்புறுத்தினாள்.

இரகசியத்தைப் பேணுவதற்காக அனைத்து நிறுவனங்களினதும் தனிநபர்களினதும் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. சம்பவக்கற்கைநெறியில் உள்ளடக்கிய தகவல்கள் அனைத்தும் உண்மை நிகழ்வுகளாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் சந்திரன் குமாரி மேல் அன்பு காட்டினாலும் சில மாதங்களுக்குப் பின் அவனும் உடல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் குமாரியைத் துன்புறுத்தினான். குமாரி திருமணப் பதிவுப் பத்திரம் பற்றிக் கேட்டபோதெல்லாம் அவள் வயதுக்கு வரவில்லை எனக் கூறி வந்தான். சந்திரன் தன்னை ஆரம்பத்தில் குமாரி மறுத்தபடியால் தான் பழிவாங்குகிறான் எனக் கூறினான். ஆரம்பத்தில் சந்திரனுடன் தொடர்பை ஏற்படுத்த குமாரி விரும்பவில்லை. பின்பு சந்திரன் தான் தற்கொலை செய்து விடுவேன் எனக் கூறியதால் தொடர்பை ஏற்படுத்தினாள்.

இரண்டு மாதங்களின் பின் சந்திரன் குமாரியை அவளது சகோதரியிடம் அழைத்துச் சென்று தாம் கணவன் மனைவியாக வாழ்வதானால் தமக்கு சீதனம் தர வேண்டும் எனக் கூறினான். குமாரியின் சகோதரியும் கணவனும் இரக்கம் காட்டவில்லை. குமாரியே தனது செயலின் பின் விளைவுகளை எதிர் கொள்ள வேண்டும் எனக் கூறிவிட்டார்கள். பின் குமாரி தற்கொலைச் செய்ய முயற்சித்தாள். சிறிது காலம் வைத்தியசாலையில் இருந்து விட்டு குமாரி தற்சமயம் சிநேகிதி ஒருத்தி வீட்டில் இருக்கிறாள். அவள் கோபம் கவலை வெட்கம் என்பவற்றால் தவிக்கிறாள்.

**தலையீடு**

சிநேகமாகல் உள்ளூர் அரசார்பற்ற நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த சமூக சுகாதார மேம்படுத்துனர்கள் வைத்தியசாலையில் குமாரியைச் சந்தித்து அவளுடைய கதையை ஒத்துணர்வுடன் கேட்கிறார்கள். குமாரி வைத்தியசாலையை விட்டுச் சென்றதும் சமூக சுகாதார மேம்பாட்டாளர் ஒருவர் குமாரியை பரிசோதனைக்காக ஒழுங்காக வைத்தியச்சாலைக்கு அழைத்துச் சென்றார். முறையான உளவளத்துணை வழங்குவதற்கு முன் ஒரு சிறந்த உறவு ஒன்று கட்டியெழுப்பப்பட்டது. சமூக சுகாதார மேம்பபாட்டாளரின் இரகசியம் பேணும் தன்மை தீர்ப்பளிக்கா உறவு போன்றவற்றால் குமாரிக்கு அவரில் நம்பிக்கை ஏற்பட்டது. சமூக சுகாதார மேம்பாட்டாளர்கள் குமாரியின் குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவையும் நம்பிக்கை விழிப்புணர்வு போன்றவற்றினூடாகப் பெற்றுக்கொண்டார்கள்.

**உளவளத் துணை**

குமாரி உளவளத் துணை பெறுவதற்கு இணங்கினாள். உளவளத் துணை வழங்குனர் குமாரிக்கு உணர்வு ரீதியாக ஆதரவு வழங்கி குமாரி உணர்வுகளையும் வெளிக்காட்ட உதவினர். குமாரிக்கு சாந்தப்படுத்தல் பயிற்சி வழங்கப்பட்டதோடு எதிர்கொள்ளும் நடைமுறைகளும் கற்பிக்கப்பட்டது. இது குமாரியை அவள் தற்கொலைக் செய்ய முயன்ற குற்ற உணர்வில் இருந்து மீட்டெடுத்தது. உளவளத் துணை வழங்குனர் குமாரியை அவளது திறன்களை இனங் கண்டுகொள்ளத் தூண்டி அவளைச் சுற்றி இருக்கும் வளங்களை சுமூகமான முறையில் பாவித்து வாழ்வை நேரான வழியில் மேம்படுத்தும் வண்ணம் துணையாக நின்றனர். குமாரிக்குத் தனது சுய கணிப்பைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருந்தது. அவள் தனது வாழ்வில் இலக்குகளை உருவாக்கி அவற்றை அடையும் வண்ணம் உளவளத் துணை வழங்குவதுடன் இணைந்து செயற்படும் வண்ணம் சிறந்த தீர்மானங்களை எடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விழிப்புணர்வு ஏற்படுத்தல்**

அரசார்பற்ற நிறுவனம் குமாரிக்கு வைத்திய, சட்ட, பொருளாதார ஆதரவை வழங்கியது. மாதா மாதம் வைத்தியச்சாலையில் அவள் பரிசோதனைக்காகச் சென்றாள். சட்ட ரீதியான சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கும் அழைத்துச் செல்லப்பட்டாள். சிறுவர் உரிமைகள், அவை எவ்வாறு சமுதாயத்தில் துஷ்பிரயோகிக்கப்படுகின்றன அச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு ஆதரவு தர வேண்டும் போன்ற தகவல்கள் யாவும் குமாரிக்கு வழங்கப்பட்டன. குமாரிக்கு விசேடமான சட்ட ரீதியான தகவல்களும் வழங்கப்பட்டு தேவையேற்படின் அவள் எவ்வாறு சந்திரன்மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனவும் கூறப்பட்டது. நிறுவனம் குமாரி வாழும் பிரதேசத்தில் உள்ள பொருத்தமான நிறுவனங்களிடம் குமாரிக்குத் தொழிற் பயிற்சி வழங்கும்படி வாதாடியது.

**ஆதரவுக் குழு**

குமாரிக்கு தனிப்பட்ட உளவளத் துணையில் நம்பிக்கை ஏற்பட்டதும் அவளைச் சமுதாய ஆதரவு வழங்கும் ஒரு குழுவுக்கு அறிமுகம் செய்தார்கள். ஆதரவு வழங்கும் குழுவின் பிரதான நோக்கம் குமாரி போன்றோர் தனிமைப்படுத்தப்படாமல் இருத்தலே. குழுவில் உள்ள அங்கத்தவர்கள் ஒத்த பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடிப் பொதுவான பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் எனத் தெரிந்துகொண்டனர். ஆதரவுக் குழு குமாரிக்கு ஆதரவு கிடைக்கிறது எனும் ஒரு சூழலையும் உருவாக்கிக்கொடுத்தது. குமாரி சூழல் செயற்பாடுகளிலும் நிகழ்வுகளிலும் பங்கு பற்றினாள். குமாரியின் திறமைகள் தனது சுய கணிப்பை மேலும் உயர்த்தக் கூடியதாக இருந்தது. இந் நிறுவனம் இவ்வாறான பிள்ளைகள் விடுவிக்கப்படுவதை தூண்டுவதோடு அதை மேற்பார்வையும் செய்கிறது. பிள்ளைகளின் தேவைகளைப் பொறுத்து இச் சர்வதேச அரசார்பற்ற நிறுவனம் பல பங்குதார முகவர்களுடன் இணைந்து பல சேவைகளை வழங்குகிறது. இழந்த கல்வியை மீட்டல், உள வளத் துணை தொழில்சார் பயிற்சி போன்ற சேவைகளும் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளும் வழங்கப்படுகின்றது.

**நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சேவைகளின் மேற்கண்ணோட்டம்**

உள்ளூர் அரசார்பற்ற நிறுவனத்தின் பிரதான நோக்கம் சமுதாயத்தில் உள்ள தனிப்பட்டவர்களின் உடல் நல மேம்பாடும் உளசமூக நன்னிலையுமே. இவற்றை எய்தும் வகையில் நிறுவனம் சிநேகத்தை ஏற்படுத்துவதையும் உளவளத் துணைச் சேவைகளை வழங்குவதையும் மேற்கொண்டு ஆதரவுக் குழுக்களையும் உருவாக்கியது. அத்தோடு சிறுவர் உரிமைகள் பெண்கள் உரிமைகள் உள நலப் பிரச்சினைகள் பற்றிய விழிப்பை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளையும் NGO நடாத்தியது. வாடிக்கையாளர்களின் தேவைக்கமைய தகவல்களை வழங்கி வந்தது. உள்ளூர் மாவட்ட தேசிய மட்டங்களில் வாடிக்கையார்களுக்காக வாதாடியும் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புணர்வூட்டல்

ஒரு குறித்த தலைப்பில் தகவல்களை வழங்கி அறிவை உயர்த்தும் செயற்பாடுகளைக் குறிப்பதே விழிப்புணர்வூட்டல் ஆகும். வெற்றிகரமாக நடாத்தப்படும் விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகளே சிறந்த அறிவுள்ள தனியாள்களையும் சமுதாயங்களையும் உருவாக்கும். உளசமூக நன்னிலைக்கு இது பெரும் நன்மையைக் கொடுக்கிறது. காரணம் மக்கள் தன்னம்பிக்கையை வளர்த்து சிறந்த தெரிவுகளை வாழ்வில் செய்வதற்கு உதவுகிறது.

சமுதாயத்தில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு நடாத்தப்படும் பயிற்சிப் பட்டறைகளுக்கூடாக விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இருந்தபோதும் வேறு முறைகளும் கடைப்பிடிக்கப்படலாம். தகவல்கள் அச்சிடப்பட்ட பிரசாரங்கள் மின்னியல் ஊடகங்கள் சகபாடிகள் கற்பித்தல் என்பவற்றிற்கூடாகவும் விழிப்புணர்வூட்டப்படலாம்.

இவ்வாறான செயற்பாடுகள் பல்வேறுபட்ட தலைப்புக்களில் நடாத்தப்படும். – மன அழுத்த முகாமை பொது சுகாதாரம் பிள்ளை பராமரிப்பு பெற்றோராகக் கடமைகள் சிறுவர் உரிமைகள் வீட்டு வன்முறைகள் பெண்கள் உரிமைகள் போன்றவை.

விழிப்புணர்வூட்டல் திறமைப் பயிற்சியில் இருந்து வேறுபட்டது.

## ஆதரவுக் குழுக்கள்

சமூக உறவுகளையும் வலைப்பின்னலையும் மேம்படுத்தல் என்பது முதன்மையாக தனிமைப்படுத்தப்பட்ட தனியாட்களையும் குழுக்களையும் உதவிகளினூடாக பயன்படுத்துவதும் அவர்களது சமூகத் தொர்புகளை விரிவுபடுத்துவதுமாகும்.

இது பல்வேறு வழிகளில் நடாத்தப்படலாம். ஆனால் அநேகமாக தெரிவு செய்யப்பட்ட இலக்குக் குழுக்களுக்கு சுய உதவி அல்லது ஆதரவுக் குழுக்கள் வடிவத்தை எடுக்கின்றது. ஆதரவுக் குழுக்கள் தகவல்கள் அனுபவங்கள் வளங்கள் ஆகியவற்றின் பகிர்வுக்கான வாய்ப்புகளை வழங்குகின்றது. குழு அங்கத்தவர்கள் மேலதிக உதவி அல்லது ஆதரவு தேவைப்படுவோருடன் ஒருமைப்பாட்டுடன் தொழிற்படவும் முடியும். குழுக்களினாலும் குழு வேலைகளாலும் மக்களிடையே பலமான உறவுகள் உருவாக்கப்படலாம்.

ஆதரவுக் குழுக்களுக்கு வெளியில் சமூக உறவுகளும் வலைப் பின்னலும் சமுதாய மட்டத்தில் இணைந்த செயற்திட்டங்கள் செயற்பாடுகள் போன்றவை ஒழுங்கமைப்பதற்கூடாகவும் பலப்படுத்தப்படலாம். பகிர்ந்துகொள்ளல் எனும் இலக்கு மக்கள் வளங்களைச் சேர்க்கவும் ஒருவருக்கொருவர் உதவவும் உதவுகிறது. இதே போன்று சிறுவர் சங்கங்கள் விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் சமுதாயச் செயற்பாடுகள் போன்றவையும் மக்கள் ஒன்றாக நேரத்தை கழிக்கவும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளவும் உதவுகிறது.

ஏனைய உளசமூக செயற்பாடுகளில் உள்ளது போன்று உறவுகளின் தரமே முக்கியம். இணைப்புகளும் உறவுகளும் முறைசார் அல்லது முறைசாராததாக இருக்கலாம் எப்படியானாலும் தனியாள் அல்லது கூட்டு மீள் தன்மையைக் கூட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல்முறைத் தேவைகளை அடைதல்

மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பெறுதல் பொருளாதார கஷ்டம், சேவைகள் பெறுவதில் கஷ்டம், சுகவீனம் போன்ற செயல்முறை சேவைகள் உளசமூக தொழிலைச் செய்கின்றது. காரணம் துயரைக் கழைந்து துயருக்கான நிவாரணத்தை வழங்குகின்றது. பாதிக்கப்பட்டவர் அல்லது பட்டவர்கள் ஒரு குழுவுக்கு சொந்தமானவர்கள் எனும் செய்தியை மீள் உறுதிப்படுத்துகிறது. துயரத்தில் ஆழ்ந்திருப்பவர்களைக் கவனியாது விடுதல். அவர்களை செயல்முறை உதவிக்கு வழிகாட்டாமல் விடுதல் அவர்களது துன்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

## செயல்முறை உதவி

மனிதாபிமான உதவி: மனிதனால் ஆக்கப்பட்ட ஆபத்துக்களினால் அவதியுறுவோரின் உடனடித் தேவைகளுக்கு பதில் அளித்தல் மீட்கும் செயற்பாடுகளாவன உணவு, குடிநீர், உடை என்பன வழங்கல். தற்காலிக குடியிருப்பு வசதி மேலும் ஆபத்துகளிலிருந்து பாதுகாத்தல். அது சில பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக இருக்கலாம் அல்லது பெரிய இடம் பெயர்ந்த தொகை மக்களுக்காகவாக இருக்கலாம்.

- சட்ட உதவி: வன்முறைகளுக்குள்ளானோர் அல்லது வன்முறை ஆபத்தை எதிர்நோக்குவோருக்கு சட்ட உதவி வழங்கும் ஏற்பாடு.
- வருமானம் ஈட்டல்: வருமானம் பெறுவதற்கு அல்லது தமது வருமானத்தை உயர்த்துவதற்கு உதவுதல். உதவிகள் அல்லது கடன் வழங்குவதற்கூடாக இடம் பெறலாம். சுய தொழிலுக்கான அறிவுரை பயிற்சி மற்றும் செலவில்லாத வீட்டுத் தோட்டம் அமைத்தல் போன்றன.
- தொழிலுக்கான உதவி: பொருத்தமான வேலைகளுக்கு தகவல்களை வழங்கி வழிகாட்டல்.
- சுகாதார வைத்திய உதவி: ஒழுங்கான நிபுணத்துவம் வாய்ந்த வைத்திய உதவி அவசரகால நிலமைகளில் வழங்கும் வாய்ப்பு.

இருந்தபோதும் இவ் உளசமூக கூறின் முக்கியத்துவம் எந்தளவு தலையீடு என்பதில் அல்லாமல் தலையீட்டின் உணர் திறனிலேயே தங்கியுள்ளது. செயல்முறை உதவி ஒரு வினைத்திறன் மிக்க உளசமூக தலையீடாக அமைவதற்கு உணர்வு ரீதியாக ஒருவருடன் ஒருவருடனான தரமான தாக்கம் மிக முக்கியம்.

## பாதுகாப்பு

உளசமூக நன்னிலைக்கு சமுதாயத்தின் சகல அங்கத்தவர்களையும் துஷ்பிரயோகம் மற்றும் பாதிப்பை ஏற்படுத்தும் அபாயங்களில் இருந்து பாதுகாத்து மீட்டெடுத்தல் மிக முக்கியம். அபாயம் தீங்கு மக்களின் நன்னிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தி பங்களிப்பையும் பாதுகாப்பின்றிய உணர்வையும் கொடுப்பதோடு ஆபத்துக்குள்ளாகும் அபாயத்தையும் கொடுக்கும். சிலருக்கு பாதுகாப்பு வழங்கல் என்பது வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான வேறுபாடாக இருக்கும்.

பாதுகாப்பு வழங்கல் என்பது மக்களுக்கு துஷ்பிரயோகம் ஆபத்துக்கள் பற்றிய தகவல்களை வழங்குவதும் அவற்றில் இருந்து எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம் அல்லது தவிர்க்கலாம் எனும் வழிகளை வழங்குவதுமாகும். ஆபத்துக்குள்ளாதல் அல்லது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்கள் இடம் பெறலாம் எனும்போது நேரடியாகச் சென்று பக்கத்தில் இருத்தலும் பாதுகாப்பு நடவடிக்கையாகும். சில சந்தர்ப்பங்களில் வன் செயல் ஆபத்தை மின்சாரம் வழங்கல், வீதிகளுக்கு வெளிச்ச மூட்டல், முறையான போக்குவரத்து ஏற்பாடுகள் போன்றவற்றால் தவிர்க்கலாம்.

பாதுகாப்பு வேலை பின்வருவனவற்றை அடக்குகின்றது.

ஆவணப்படுத்தலும் சான்றிதழ்களும்: மனித உரிமை மீறல்களை திருத்தமாகப் பதிவு செய்து பாதிக்கப்பட்டவரின் துயரை ஏற்றுக்கொண்டு சரியான நீதியைப் பெற்றுக்கொடுத்தல்.

- பாதுகாப்பு அளித்தல்: (Security presence) நேரடியாகச் சென்று மக்களுக்கு பாதுகாப்பு வழங்கல் ஒரு முக்கிய காப்பு நடவடிக்கையாகும்.
- சமரசமும் முரண்பாடு தீர்த்தலும்: பாதிக்கப்பட்டவருக்காக தீர்வுக்காக அல்லது நன்னிலைக்காக சமரசம் பேசல்.
- துடிப்பான உடன்பாட்டு நடவடிக்கைகள்: மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் உடனடியாக குடியிருப்பு வசதிகள் வழங்கல், துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாத்தல், பொருத்தமான அதிகாரிகளின் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல். பாதுகாப்பு வேலைகளில் ஈடுபடுபவர்கள் தமது சேவையை குறைத்து மதிப்பிடுதல் ஆகாது. விசேடமாக அரசியல் முரண்பாடு சட்டங்களை முறித்தல் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும்போது இவர்களது சேவை மிகவும் முக்கியம்.

## புனர்நிர்மாணமும் மீள் ஒன்றிணைத்தலும்

பிரதான சமுதாய வாழ்வின் வெளியே உள்ளவர்களுக்கும் புனர்நிர்மாண வேலைகள் மீள் ஒன்றிணைத்தல் தலையீடுகள் இடம்பெறும். இம் முறையானது மக்களை உள உணர்வு சமூக பொருளாதார மற்றும் ஆன்மீக ரீதியாகப் பலம் அளித்து சமுதாய வாழ்வில் மக்களை ஒன்றிணைத்தலாகும்.

சமூகத்தினால் பல்வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் நன்னிலையை மேம்படுத்துவதற்காக இவ் உதவி வழங்கப்படுகிறது. இவ் உதவி வழங்கப்படும்போது பாதிக்கப்பட்ட தனியாட்கள் குழுக்கள் என்பவற்றுடன் மட்டுமல்லாமல் பாதிக்கப்படாத ஏனையோரைக்கொண்ட சமுதாயத்தினுடனும் வேலை செய்தல் வேண்டும்.

தற்போது இடம் பெற்றுக்கொண்டிருக்கும் முரண்பாடு காரணமாக புனர்நிர்மாணமும் மீள் ஒன்றிணைத்தலும் கணிசமான அளவு முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.

புனர்நிர்மாணம் ஒரு தனியாளினது அல்லது குழுவினது நன்னிலைசார் சகல துறைகள் சார்பாகவும் வேலைச் செய்வதைக் குறிக்கும். அத்தோடு குடும்பத்தில், சமுதாயத்தில், நாட்டில் ஏனையோர் இவர்களை எவ்வாறு எடுத்துக்கொண்டுள்ளார்கள் என்பதில் விசேட கவனம் செலுத்தல் வேண்டும். எப்பொழுதும் பிரச்சினை தனியாளை அல்லது குழுவைச் சார்ந்தது எனக் கொள்வது சகஜம். ஆனால் முழுச் சமுதாயத்தினதும் மனப்பாங்குகள் நடவடிக்கைகளோடும் பிரச்சினை தொடர்புடையதாகும்.

இக்காரணத்திற்கான புனர்நிர்மாண மீள் ஒன்றிணைத்தல் வேலைகள் ஒன்றிணைக்கப்படுவதோடு மாத்திரமல்லாமல் முழுச் சமுதாயத்துடனுமே நிகழ்த்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்ணக்கரு தெளிவு சம்பந்தமான சிறு புத்தகம் சம்பவக் கற்கை – விளையாட்டுச் செயற்பாடுகள்**

**பின்னணி**

10 வயதுடைய குமார 6ம் வகுப்பில் கற்கிறான். குமாரவின் அப்பா தாயையும் சகோதரங்களையும் விட்டுச் சென்ற பின் குமாரவின் தாயார் தனது பிரதேசத்தில் வாழ்க்கைத் தொழில் வாய்ப்பு ஏதுமில்லாததால் மத்திய கிழக்கு நாட்டிற்கு வேலை தேடிச் சென்றாள். தற்சமயம் குமார தனது மாமியாருடனும் இரு சகோதரிகளுடனும் வாழ்ந்து வருகின்றான்.

குமார தன்னையும் சகோதரிகளையும் தனது மாமியார் நன்றாக பார்த்து வருகிறார் என நம்பினாலும் அவனது கதை அசாதாரணமானதொன்றல்ல. அப் பிரதேசத்தில் வாழ்க்கைத் தொழில் வாய்ப்புக்கள் அரிதாக உள்ளதாலும் பொருளாதார வாய்ப்புக்கள் குறைவாக உள்ளதாலும் அநேகமான ஆண்களும் பெண்களும் மத்திய கிழக்கு நாடுகள் சென்றுள்ளார்கள். இவர்கள் பல வருடங்கள் அங்கு கழிக்க வேண்டியுள்ளது. இந்நிலை குமார போன்ற பிள்ளைகளை பாடசாலையில் இடைவிலகல் சிறு வயதில் ஊதியம் தேடல் சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றிற்கு ஆளாக்குகின்றது. இந்நிலை இளம் பெண் பிள்ளைகளை வீட்டில் சமையல் போன்ற பாரம்பரிய "அம்மா" எனும் பங்கை ஏற்கத் தூண்டுகிறது. சிறு வயதில் திருமணம் செய்யவும் கட்டாயப்படுத்துகிறார்கள்.

**தலையீடு ஏன்?**

குமாரவுக்கும் அவரது சிநேகிதர்களுக்கும் முறைசார் கல்வி நடவடிக்கைகள், கலை, விளையாட்டு போன்ற ஓய்வு நேர நடவடிக்கைகளைக் கொண்ட அவனுடைய அயலிலுள்ள ஒரு பிள்ளை நேயச் சூழல் ஒரு சுவர்க்கமாகும். மேலாக இந்நிலையம் பிள்ளைகளும் இளைஞர்களும் ஒன்று சேரவும் தமது விருத்திக்குத் தேவையான சமூகத் திறன்களை கற்றுக்கொள்ளவும் உதவும். "பாடசாலைக்குப் பின் எனது நேரத்தை பிள்ளை நேய மையத்தில் நன்மைப் பயக்கும் வகையில் கழிப்பதற்கு எனக்கு மிகவும் விருப்பம். இது எனது நேரத்தை உபயோகமாகக் கழிப்பதற்கு உதவுகிறது." எனக் குமார கூறினான். பிள்ளை நேய மையத்தில் பிள்ளைகள் கதைப் புத்தகங்கள் வாசிக்கவும் விளையாடவும் சமூக சேவைகள் தொடர்பான விடயங்களைக் கற்கவும் சிநேகிதர்களுடன் கலந்துரையாடவும் வாய்ப்புகள் கிடைக்கிறது. அத்தோடு நாடகம் பிள்ளைகள் துஷ்பிரயோகத் தடுப்பு நிகழ்ச்சிகள் உலக நீர் நாள் போன்ற விசேட சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளிலும் பிள்ளைகள் பங்குகொள்ள முடிகிறது.

**தலையீடு**

பிள்ளைகளின் கிட்டிய சூழலில் பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் பிள்ளை நேய மையங்கள் அவசரகால தலையீடாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் சமுதாய அடிப்படையிலான அணுகுமுறையை கடைப்பிடித்து மிகவும் அவசியமான அவசர நிலைமைகளில் உதவிகளை வழங்கி சமுதாய மீளமைப்புக்கு உதவுகிறது. பிள்ளை நேய மையம் பிள்ளைகளுக்கு பாதுகாப்பான ஒரு விளையாட்டிடமாக இருந்து பந்து விளையாட்டுகள், வரைதல், கதை சொல்லல் போன்ற தொழிற்பாடுகளுக்கு இடமளிக்கின்றது. இளம் தாய்மார்கள் தமது குழந்தைகளுடன் இங்கு ஒன்று கூடி தமக்குத் தேவையான உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான ஆதரவைப் பெறுவதோடு செயற்பாடுகளில் ஈடுபட்டு போசாக்கு ஆரம்ப பிள்ளை விருத்தி வாழ்க்கைத்தொழில் திறன்கள் போன்ற திறன் விருத்தியையும் தாய்மார் பெற்றுக்கொள்ளலாம். சிறுவர் உரிமைகள் பற்றிய கொள்கைகளும் சமுதாயமட்ட விருத்தி எனும் சட்டவரைபுக்குள் பங்குபெறுதலும் இங்கு பிரயோகிக்கப்படுகிறது. சில சமுதாயங்களில் முன் பள்ளிகள் பிள்ளைகள் இளைஞர்களுக்கான சங்கங்கள் போன்றன உருவாக்கப்பட்டுள்ளன.

**நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகள் பற்றிய மேற்கண்ணோட்டம்.**

சர்வதேச அரசார்பற்ற நிறுவனம் பிள்ளைகள் பாதிக்கப்படக்கூடிய பிரச்சினைகள் பற்றிய விடயங்களை ஆழுமை வளர்த்தலுக்கூடாகவும் சிறுவர் பாதுகாப்பு, உரிமைகள் பிள்ளை நல சமுதாயத்துடனான தொடர்பு கொள்ளல் போன்ற விழிப்புணர்வை வழங்கும் அமர்வுகளை ஒழுங்கு செய்தல் போன்றவற்றிற்கூடாக அணுகுகின்றது. பிரச்சினைகள் சமுதாய மட்ட கருத்தரங்குகள் சிறுவர்களுடனும் இளைஞர்களுடனும் நேரடித் தொடர்புகள் போன்றவற்றிற்கூடாகவும் தீர்க்கப்படுகின்றது. உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டத்தில் சிறுவர்கள் பாதிப்புறுவது தடுக்கப்பட்டு அவர்களது உரிமைகள் பெறப்பட்டு வாழ்கைத் தொழில் மேம்படுத்தப்படுவதையும் நிறுவனம் விழிப்புணர்வு உயர்த்தல் மூலம் எய்த முனைகிறது.

## சிறந்த தரமான சேவைகள் உறுதி செய்யப்படல்

## வலைப்பின்னல் அமைத்தலும் இணைப்பேற்படுத்தலும்

முறைசார் அல்லது முறைசாரா முறையில் ஒத்த நாட்டங்கள் உடைய தனியாள்கள் அல்லது நிறுவனங்களுடன் பரஸ்பர உதவிக்கும் ஆதரவுக்குமான இணைப்புகளை ஏற்படுத்தல் "வலைப் பின்னலை உருவாக்கலாகும்" "இணைப்பேற்படுத்தல்" என்பது முயற்சிகளில் இணைப்பும் நிறுவனங்கள், தனியாள்கள் மத்தியில் வலைப்பின்னலின் செயற்பாடுகளுக்கு வெளியே ஒரு கூட்டாக இணைந்து இணைந்தவர்கள் மத்தியில் ஒரு தொடர்ச்சியாக உறவை வைத்திருத்தல் ஆகும். பொதுவான குறிக்கோள்களை எய்தவும் பொருள் வளங்களைப் பகிர்ந்து கொள்ளவும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்வதற்கு இணைந்து செயற்படுவதற்கு வலைப் பின்னலும் இணைப்பும் அவசியம்.

உளசமூகப் பிரிவில் வலைப்பின்னலும் இணைப்பும் இல்லாவிடில் சேவைகள் சிறந்த மாதிரி வழங்கப்படுதல் தடைப்படும். ஒரே சேவைகள் திரும்பவும் வழங்கப்படுதல் எய்த முடியாத இலக்குகளுக்கூடாக தனியாட்களையும் சமுதாயங்களையும் புறக்கணித்தல். சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தியாக்க முடியாத சேவைகள் வழங்கப்படல், ஒரு சமுதாயத்தில் புற இலக்குகளை (External Goal) திணித்தல் போன்றவை உளசமூக நன்னிலையை பெரிதும் பாதிக்கும். துன்பங்கள் குறைக்கப்படுதல் இடம்பெற மாட்டாது. வலைப் பின்னல் அமைப்பும் இணைப்பும் ஏற்படுத்தப்பட்டு உளசமூக தலையீடுகள் இடம்பெறும்பொழுது சமுதாயத்தின் தகவல்கள் வளங்கள் பற்றிய அறிவு பகிரப்பட்டு பயனுறுதிமிக்க உளசமூக சேவை வழங்கப்படும் வாய்ப்பேற்படும். தேவைகள் இணங்காணப்படல் ஒரே சேவை மீள் வழங்கல் தவிர்க்கப்படலும் இடைவெளி நிரப்பலும் தலையீடுகளுக்கிடையில் இணைப்பிற்கான ஆதரவு வழங்கல் சேவைகளின் ஆகக் குறைந்த தரத்தை மேம்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயலுமை வளர்த்தல்/ஆளுமை வளர்த்தல் (Capacity Building )

'இயலுமை வளர்த்தல் என்பது உளசமூக பிரிவில் சேவையாற்றுவோரின் அறிவு திறமைகள் என்பன விருத்தி செய்யப்பட்டுக்கொண்டிருப்பதைக் குறிக்கின்றது. உளசமூக சேவை வளங்குவோர் பொருத்தமான ஆதரவு வழங்கும் திறன்களைக் கொண்டிராவிடில் பயனுறுதிமிக்க சேவையை வழங்குவதில் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். அநேகமான நிறுவனங்கள் 'வேலை செய்து முடித்தலுக்கு' முக்கியத்துவம் வழங்குகின்றனவே ஒழிய வழங்குனருக்கு பொருத்தமான அறிவும் திறன்களும் தரமான சேவையை வழங்குவதற்கு உண்டா என்பது பற்றி சிந்திப்பதில்லை. பயனுறுதிமிக்க பயிற்சிகள் இல்லாதிருத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் பயனுறுதி வினைத்திறன் என்பவற்றைப் பாதிக்கின்றது.

சகல மட்டங்களிலும் முகாமைத்துவ மட்டம் தொடக்கம் நேரடியாகச் சேவை வழங்குவோர் வரைக்கும் திறன் விருத்தி நடைபெறுவதையே இயலுமை வளர்த்தல் குறிக்கின்றது. வெளிக்கள மட்டத்தில் சேவையாற்றுபவர்களின் இயலுமை வளர்த்தல் பயிற்சி, பயிற்சியின் செயல் முறையில் இருந்து எண்ணக்கரு ரீதியாக அகற்றப்படுகிறது. அதே விடயங்கள் கற்பனையில் கற்பிக்கப்படுகின்றது. எண்ணக்கரு ரீதியான அறிவு செயல்முறைத் திறன்களுள் புகுத்தப்படுகின்றதான என்பதை மேற்பார்வை செய்வதற்கு திட்டங்கள் இல்லை. மறுபக்கத்தில் உளசமூக முன்னெடுப்புகள் யாவும் சுருக்கமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. சேவை முகாமையும் வழங்கலும் பற்றிய சகல விடயங்களும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. நிறுவன ரீதியான முகாமைத்துவம் மேற்பார்வை விடயங்கள் போன்றவை எண்ணக்கரு ரீதியான விடயங்களுக்கும் செயல்முறை விடயங்களுக்குமிடையில் இணைப்புள்ளதை உறுதி செய்வதற்கும் இச் சேவைகளுக்கான முகாமைத்துவ, மேற்பார்வை விதிகள் உறுதி செய்யப்படுவதற்கும் அவசியம். நிறுவனங்களின் விழுமியங்களில் 'உளசமூக உளத் திறன்' இல்லாதிருத்தல் சேவை வழங்கலையும் வழங்குவோரையும் பெருமளவு பாதிக்கின்றது. நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்புக்கும் நிர்வாகத்திற்கும் பொறுப்பான முகாமைத்துவ மட்ட உத்தியோகஸ்தர்களுக்கு உளசமூக விழுமியங்களை நடைமுறைகளில் இணைத்துக்கொள்வதற்கும் தமது உத்தியோகஸ்தரின் உளசமூக நன்னிலை தாம் சேவை வழங்கும் தனியாள்கள் சமுதாயம் என்பவற்றின் உளசமூக நன்னிலை என்பவற்றை மேம்படுத்துவதற்கு ஆதரவு வேண்டும்.

### மீட்டுப்பார்த்தலுக்கும் கலந்துரையாடலுக்குமான வினாக்கள்

- இங்கு விபரிக்கப்பட்டதைவிட நீங்கள் ஈடுபட்டிருக்கும் வேறு சில தலையீடுகளைக் குறிப்பிடவும் உளசமூக நன்னிலையில் இவை ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை. நீர் இவ்வாறு நினைக்கிறீர்.
- உமது வேலையை இயலுமை வளர்த்தல் வலைப்பின்னல் அமைத்தலும் இணைப்பேற்படுத்தலும் போன்றன எவ்வாறு மேம்படுத்துகின்றன.
- சம்பவக்கற்கைகள் விபரிப்பது போன்று அநேகமான நிறுவனங்கள் உளசமூகத் தேவைகளுக்கு ஒரே மாதிரியாகப் பதிலளிப்பதில்லை. ஆனால் பல்வேறுபட்ட செயற்பாடுகளை கலந்து வழங்குகின்றனர். இவ்வாறான கலப்பு நடவடிக்கைகள் உபயோகிக்கும்போது நீர் எதிர்கொண்ட சவால்கள் சிலவற்றைக் கூறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னூட்டல் படிவம்

இந்தக் கையேடு பிரியோசனமானதாக இருந்ததா? ஆமெனில் எவ்வாறு? இல்லையெனில் எவ்வாறு இதனை முன்னேற்றலாம்

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

மொழி தகவல்கள் வடிவமைக்கப்பட்ட முறை மற்றும் அறிவு கட்டியமைக்கப்பட்ட முறை என்பன அடிப்படையில் இக்கையேடு இலகுவாக புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்ததா?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

குறிப்பாக எப்பகுதி கூடுதலான பிரியோசனமாக இருந்தது? ஏன்? எப்பகுதிகளை நீங்கள் மாற்றியமைப்பீர்கள்? ஏன்?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

மேலதிக இணைப்புகள் இணைக்கப்பட வேண்டுமென நீங்கள் கருதுகின்றீர்களா? விபரிக்கவும்

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

இக்கையேட்டிலுள்ள கருப்பொருட்கள் கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்படக் கூடியவையா? இல்லையாயின் நீங்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளை விபரிக்கவும். எவ்வாறு இக்கையேட்டின் உள்ளடக்கங்களை மாற்றியமைப்பீர்கள்?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

மன்றம் இக்கையேட்டினை நீங்கள் பயன்படுத்திய அனுபவங்களை அறிய ஆவலாகவுள்ளது. சில வினாக்கள் இணைக்கப்பட்டுள்ளன. எங்கள் அடுத்த பதிப்பிற்கு பயனுள்ளதாக இருக்குமேன நீங்கள் கருதும் கருத்துக்களை இணைப்பதற்கு தயங்க வேண்டாம். உங்கள் கருத்துக்களை கீழ்க்கண்ட முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பிவைக்கவும்.

உளசமூக இணைப்பாளர் CHA 86 றொஸ்மிட் பிளேஸ் கொழும்பு 7. psfcoord@cha.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CONSORTIUM OF

CHA

HUMANITARIAN AGENCIES

ISO 9001:2000 Certified

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு (CHA)
86, ரொஸ்மிட் பிளேஸ் கொழும்பு-07, இலங்கை
தொலைபேசி / பக்ஸ் : (94-11) 4610943/4 :
மின்னஞ்சல்: psfcoord@cha.lk
இணையத்தளம் : www.humanitarian-srilanka.org.

ISBN 955104132-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org